# போலாமா

ஸுபா

## உள்ளே

போலாமா? .......... 2
முன்னுரை .......... 4
பிரயாணம் ஆரம்பம் .......... 16
திருமீயச்சூர் .......... 35
திருவாரூர் .......... 43
நெகபடாம் .......... 48
நாகப்பட்டினம் .......... 54
வேளாங்கண்ணி .......... 63
நாகூர் - தர்கா .......... 71
திருக்கடையூர் .......... 85
திருநள்ளார் .......... 96
மாயவரம் மறுபடியும் .......... 100
தேரழுந்தூர் .......... 104
கும்பேஸ்வரர் .......... 108
சுவாமிமலை .......... 113
திருப்புள்ளமங்கை .......... 115
மதுரைவீரன் .......... 124
நாச்சியார் கோயில் .......... 143

சாரங்கபாணி கோயில் .................. 149
சோமேஸ்வரர் கோயில் .................. 154
சக்ரபாணி கோயில் ....................... 155
‘ஹோம் ஸ்வீட் ஹோம்’ .................. 156
முடிவுரை .................................... 157

# போலாமா?

## குறும் புதினம்

பயண
அனுபவங்களின் அடிப்படையில்.

**© ஆசிரியர்: ஸுபா**

இதில் வரும் விஷயங்களை நாங்கள் தீவிர ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளோம் என்று நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல!

“அப்பா அப்பா, நாம ஒரு நாய் குட்டி வைச்சுக்கலாமா?” என்று எங்க பசங்க பல வருடங்களாக நச்சரிச்சபோதும், எங்களோட ஒரே பதில், “உங்களை வளர்ப்பதே பெரிய பாடு. அதில் நாய் வேறயா” என்ற இத்து போன டயலாக் தான். அப்படி இருந்த நாங்க, பத்மாவின் அம்மா வீட்டில்

‘ரஸ்டி’ என்றொரு அழகான நாயின் வரவால், எந்த அளவுக்கு மாறினோம் என்பதை நினைத்து எங்களுக்கே ஆச்சரியம். நாய்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. எப்படி வாழ்க்கையை இருக்கும் தருணத்தில் அனுபவிப்பது, எதிர்பார்ப்புகளற்ற அன்பை எப்படிக் கொடுப்பது ..அப்பப்பா இந்த ஜீவன்களைப் படைத்ததும் மனிதனைப் படைத்ததும் ஒருவன் (அ) ஒருத்தி தானா என்று நினைக்கத் தோன்றுகிறது. “நாயே” என்பது வசவு சொல் அல்ல, அது ஒரு வாழ்த்து!

ரஸ்டியின் காதிலே “போலாமா” என்ற வார்த்தை கேட்டால் போதும், உடனே தன் தலையை உயர்த்தி, ‘என்னையும் அழைத்துக்கொண்டு போவாயா’ என்கிற தோரணையில் பார்க்கும். ரஸ்டியை மனதில் வைத்துதான் இந்தப் பயணக்கட்டுரைக்கு “போலாமா” என்று பெயர் வைத்தோம்.

First edition: September 2026

# முன்னுரை

மாற்றம் ஒன்றுதான் நிலையானது!

எங்கள் இருவருடைய கடவுள் நம்பிக்கை வழக்கத்தினால் மட்டுமே வந்ததும் அல்ல, செய்யாமல் விட்டால் “சாமி கண்ணை குத்திடுமோ” என்ற அச்சமுமில்லை. காலப்போக்கில் எங்கள் அனுபவங்களால் உருவானது. நாளையே இதுவும் மாற வாய்ப்புள்ளது!

எங்கள் அனுபவங்களைத் தொகுத்து ஒரு பயணக் கட்டுரை எழுதலாம் என்று முடிவு செய்தோம்.

முதலில் நான் பயணக் கட்டுரை எழுதலாம் என்று யோசிக்க ஆரம்பித்தபோது, என் மனசுல நிறைய கேள்விகள். எந்த பாஷையில் எழுதலாம், யார் டார்கெட் ஆடியன்ஸ் என்றெல்லாம் சிந்தனைகள். நான் படித்தது தமிழ் மீடியம் பள்ளியில்தான் என்றாலும், கல்லூரியிலிருந்து ஆங்கில வழிக் கல்விதான். ஆங்கிலத்தில் எழுதினால் ‘ரீச்‘ நிச்சயமாகப் பெரிதுதான். ஆனாலும் தமிழில் எழுத ஆசையாக இருந்ததாலும்,

நம்முடைய சிந்தனைகள் எல்லாம் நம் தாய்மொழியில் நன்றாக வெளிப்படும் என்று தோன்றியதாலும், தமிழில் எழுதத் தொடங்கிவிட்டேன்.

தமிழில் எழுதுவது என்று முடிவு செய்த பின், கூடுமானவரை தூய தமிழில் எழுத வேண்டுமா அல்லது நடைமுறையில் பேசப்படுகின்ற ஆங்கிலம் கலந்த தமிழில் எழுத வேண்டுமா என்று ஒரு கேள்வி எழுந்தது. இதில் என் மனதில் வெற்றி பெற்றது இரண்டாவது சிந்தனைதான். மூன்று காரணங்கள்; ஒன்று, என் தூய தமிழில் எனக்கே பெரிய நம்பிக்கை இல்லை. “நாதா, வந்தியத்தேவன் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்” என்றெல்லாம் எழுத முயற்சித்தால் என்ன ஆகும்? இரண்டாவது, பேசுகிற தமிழில் எழுதினால் எல்லாருக்கும் போய்ச் சேருவதற்கு சுலபமாக இருக்கும். மூன்றாவது, தமிழை “diglossic” என்று சொல்வார்கள். அதாவது, பேசுவதும் எழுதுவதும் இரண்டு மொழிகள் மாதிரி வித்யாசப்பட்டிருக்கிறது . (courtesy, Padma, M.A. Fieldwork). அதனால்தானோ,

தமிழைத் தாய் மொழியாய்க் கொண்ட பள்ளி பசங்க நிறைய பேர், தமிழில் அவ்வளவாகத் தேர்ச்சியோ அல்லது தமிழின் மீது ஆவலோ கொண்டிருப்பதில்லை. அதனால் ஒரு நடு நிலையாக “தினத்தந்தி” நாளிதழ் ஸ்டைலில் எனக்குச் சௌகரியமான தமிழைத் தேர்ந்தெடுத்தேன். எழுத்தாளர் சுஜாதா அவர்களின் மிக்ஸிங் தமிழ் அண்ட் English ஸ்டைலுக்கு ஒரு பெரிய fan. எனவே..

கீழே இருப்பது தமிழ் என்று யாராவது சொன்னால்தான் தெரியும்:



படம் 1:  Old Tam1

இது சற்றே சமீபத்திய தமிழ். எனக்கு சரிவர படிக்கத் தெரியவில்லை, நான் பள்ளியில் முழுக்க முழுக்க தமிழில் படித்திருந்தபோதிலும்:




படம் 2: Old Tam

இப்பொழுது “லை” என்று எழுதுகிறார்கள். என்னுடைய சிறு

வயதில் இதைக் கீழே காணும் விதத்தில்தான் எழுதினோம்:



படம் 3: Old lai

இந்த பயணக் கட்டுரையைத் தொகுத்து எழுதிய போது ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் எழுத எழுத, எழுதுவது இன்னும் ஒரு பிரயாணமாக உருமாறியது; இது எங்கள் இருவருக்கும் ஒரு சுவாரஸ்யமான பொழுதுபோக்காக ஆகியது. எழுத ஆரம்பித்தவுடன் எங்களுடைய அனுபவங்களில் நாங்களே மூன்றாவது மனிதர்களாகப் பயணித்தோம்.

நாங்க ரெண்டு பேரும் “நாட் தி செவ்வாய்க்கிழமை கோயில் போற டைப்ஸ்”; “நார் தி கோயிலே வேண்டாம் டைப்” - ஒரு comfortable மிட் வே - இரண்டுங்கெட்டான் - கோயிலுக்குப் போவதற்கு இன்சென்டிவ் பிரசாதம், லாங் டிரைவ் போன்றவைதான் -

ரொம்ப rationalise பண்ணாம ஒரு ஜாலி தான். சுமார் பத்து வருடங்களுக்கு முன்னால, என் அக்கா சந்திரா, அத்திம்பேர் விஜூ ஆகியோருடன் மாயவரம் சென்று ஒரு நண்பர் வீட்டில் தங்கி, அவருடைய வீட்டாருடன் நிறைய கோயில்கள் சென்றது பசுமையாக நினைவில் நிற்கிறது. எங்களுக்கு அது ரொம்ப ஒரு surprise ஆன ஒன்று; மொதல்ல ஒரு ஜாலி மூட்ல மாயவரம் ட்ரிப் போக ஒத்துக்கிட்டோம்; ஒரு வேளை இவ்வளவு கோயிலுக்குப் போவோம்னு தெரிஞ்சு இருந்தா போயிருப்போமா என்பது கொஞ்சம் டவுட் தான். எங்களுடைய சிறு வயதில் ஏதோ வீட்டில் உள்ளவர்களின் வற்புறுத்தலால் கோயிலுக்குச் செல்வோம்.

ஆனால், இந்தப் பிரயாணம் ஒரு ரொம்ப வித்தியாசமான மறக்க முடியாத experience; கிராமத்தோட நிதானம், சாப்பாட்டு ருசி, திண்ணையில் அரட்டை, சுறுசுறுப்பாக அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்த தாத்தா பாட்டிகள், விடியற்காலை

வயலின் கிளாஸ் எடுக்க சைக்கிளில் வந்த வயதான வயலின் மாஸ்டர், இப்படிச் சின்னச் சின்ன surprises and wow moments அந்த ட்ரிப் முழுவதும்; கண்ணுக்கு இதமான பச்சை, ஒரு மண் வாசனை, அவ்வளவு நெரிசல் இல்லாத சாலைகள்னு சட்டென்று ஒரு மாறுபட்ட சூழலில் இருப்பதை உணர்கிறோம். இது எல்லாத்துலயும் ஹைலைட்டுன்னு சொல்லணும்னா அது அந்த வீட்ல இருந்த காலேஜ் வயசு பசங்கதான். எங்களுக்கு ஒவ்வொரு கோயிலின் ஹிஸ்டரி மற்றும் அதோட பெருமைகளைச் சொன்ன விதம் - எங்களுக்குள் ஓர் ஆழமான விதையை விதைத்துவிட்டது. அட! இவ்வளவு இருக்கா இதுல? இதுக்கு முன்னாடி யாராவது ஒரு நாளைக்கு இருவது கோயில் போலாம்னு சொல்லியிருந்தாங்கன்னா எங்களுக்கு அதுல எவ்வளவு உடன்பாடு இருந்திருக்கும் என்று தெரியலை!

பழையன
எல்லாவற்றையும் ரொமாண்டிசைஸ் பண்ண வேண்டியதில்லை என்று

சொன்னாலும், கல்லிலும் எழுத்திலும் இவ்வளவு பொக்கிஷங்கள்! இதன் மதிப்பை உணராமல் இருந்தோமே!

சரித்திரம் என்றால் உலகத்தவர் பண்டைய ரோம் நகரத்தைப் பற்றியோ அல்லது கிரேக்க நாட்டைப் பற்றியோ பேசுகிறார்கள். இந்தியாவிலும் அதற்கு நிகராக ஒரு கலாசார பொக்கிஷம் உள்ளது என்பது மிகையானது அல்ல. கல்லும் மண்ணும் நம்மிடம் ஆயிரம் பழங்கதைகளையும் செய்திகளையும் சொல்லத் தயாராக இருக்கின்றன; கேட்கும் மனநிலை நம்மிடம் இருந்தால்!

கீழே காணப்படுகிற ஓவியம் நம்முடைய தஞ்சைக் கோயிலில் உள்ளது. இதைப் பற்றிய கதையைத் தேடி தெரிந்து கொள்ளப் பாருங்களேன்:



படம் 4: uniqpic

எங்கள் பயணக் கட்டுரையைப் படித்துவிட்டு, யாரோ ஒருவருக்கேனும், உடனே பெட்டியைத் தூக்க ஆவல் வந்தால், அதுவே எங்கள் எழுத்தின் வெற்றி.

நாங்கள் இந்தப் பயணக் கட்டுரையைப் பாதி சேர்ந்தும் பாதி சேராமலும் ஆயிரம் arguments ஓட எழுதினோம்; சின்னதோ பெரிசோ - It’s always an argument. Then we stumbled upon this article on Facebook and it left us wondering if such things could actually happen. ‘பெர்லின் ஆர்ட் பாரசைட்’ என்கிற ‘வெப்சைட்டை’

போய்ப் பாருங்கள். அதில் ஒரு தம்பதி இருபது வருடங்களாகச் சேர்ந்திருந்து ஓவியம் வரைகிறார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் இரண்டு பேரும் ஒரே ஓவியத்தைச் சேர்ந்து உருவாக்குகிறார்கள். ஒருவரின் கைவேலை முடிவடையும் தருணத்தில், மற்றவர் அதைத் தொடர்கிறார். எவ்வளவு தூரம் அவர்களுக்குள் 'கோ-ஆர்டினேஷன்' இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

It's because they don't see the difference themselves – the hand of one is the hand of the other.

Photo courtesy: Berlin ArtParasites,




படம் 5:  Berlin Artparasites

மற்ற கணவன் - மனைவி போல, நாங்கள் நிறைய விஷயங்களில் ஒத்துப்போவோம்; சில விஷயங்களில் சண்டை போடுவோம். இந்தப் பயணக் கட்டுரையைப் பப்ளிஷ் பண்ணுவதற்கு முன் எத்தனை முறை சரி பார்ப்பது என்பதில் பத்மாவுக்கும் எனக்கும் சண்டையே வந்துவிட்டது. எனக்கோ சீக்கிரம் முடித்துவிட்டு அடுத்த பயண அனுபவத்தில் பிரயாணிக்கலாம்

என்று ஆசை. பத்மாவோ அதை முடிப்பதற்கு அவசரம் காட்டாமல் இருந்தாள். ‘சக்ராடா பாமிலிய’ என்கிற ஸ்பெயின் நாட்டு தேவாலயத்தைக் கட்டிய ‘அந்தோனி கவுடி’ கதை அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். “கவுடி இந்த தேவாலயத்தை முடிக்காமல் நீண்ட நாட்களாக கட்டிக்கொண்டிருக்கிறார்” என்று அங்கிருந்த மக்கள் புகார் செய்தார்களாம். அதற்கு அவர் சொன்னாராம், “என் ‘வாடிக்கையாளருக்கு’ ஓர் அவசரமும் இல்லை”. இந்நாள் வரை அந்த தேவாலயம் கட்டிய பாடில்லை!

Bhaskar quotes this example many times – another of his ‘dad’ things – loves to repeat.

**இப்போது கதைக்குச் செல்வோம்.**

# பிரயாணம் ஆரம்பம்

பத்மாவும் நானும் “தனியாக” குஷியாக மாயவரம் பயணம் புறப்பட்டோம். இருவரும் சேர்ந்து கோயில் கோயிலாகச்

செல்லும் சாக்கில் - நெஜமா சொல்லணும்னா - ஊர் ஊராச் சுத்தலாம், கொஞ்சம் ‘ஷாப்பிங்’ செய்யலாம், ‘ப்ளஸ்’, பத்மாவிற்கு கோயில் சிற்பங்கள் மீது ஒரு நியூ ஃபவுண்ட் லவ் ‘கிரேஸ்’ கொஞ்ச நாளாக. ஒரே கல்லில் இரண்டு, இல்லை, நிறைய மாங்காய்கள்; பசங்களுக்கும் ஒரு ‘பிரேக்’, எங்களிடமிருந்து! முக்கியமா திருநள்ளார் கோயில் போக என்னிடம் யாரோ சொல்லியிருந்தார்கள். எனக்கு வேளாங்கண்ணியும் நாகூர் தர்காவும் ‘விசிட்’ பண்ண ரொம்ப நாட்களாகவே ஆசை. இன்னும் சின்ன ஆசை: அஜ்மீர் தர்காவும், சேவண் ஷெரீப் லால் ஷாபாஸ் கலந்தரும். முதலாவதே கொஞ்சம் அதிகம். இரண்டாவது பாகிஸ்தானில் உள்ளது. பார்க்கலாம், வாய்ப்பு வருகிறதா என்று! சென்னையில் இருக்கும் வேளாங்கண்ணி கோயிலுக்கும் மும்பையில் இருக்கும் ஹாஜி அலி தர்காவுக்கும் நிறைய முறை சென்றிருக்கிறேன்.

கோயம்பேட்டிலிருந்து ஓர் அரசு 'கொடாக்கு' பஸ்ஸில் ஏறினோம். கோயில் மட்டுமா; பஸ் கூட மாறவே இல்லை. பழமையில் ஊறுவது என்றால் கூட இது கொஞ்சம் ஓவர்தான்! நல்ல வேளையாகக் கும்பல் இல்லை, ஆகவே உட்கார வசதியாக 'சீட்' கிடைத்தது. ஆனாலும் ஓர் அழுக்கு மூட்டைக்குள் உட்கார்ந்து கொண்டு செல்வது போல் ஓர் உணர்வு. அதில் இருந்த மியூசிக் சிஸ்டெமில், மிகவும் சுமாரான - எல்லாரும் மறந்து போன - அதை எழுதியவரும் பாடியவரும் உள்பட - எழுபதுகளின் பாட்டுக்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். அந்த பஸ்ஸின் கண்டக்டர்க்கு என்ன கஷ்டமோ, யார் கண்டார்கள்? சுமார் ஏழு மணி நேரப் பயணம். சின்ன அசௌகரியங்கள், பெரிய கஷ்டங்களாகத் தெரியவில்லை. எல்லாம் நம்ம மைண்ட்செட் தான், இருக்கும் சூழலையும் அதில் இருக்கும் எதிர்பாராத சமய சந்தர்ப்பங்களையும் ஆனந்தமாக அனுபவிப்பதற்கு. அதிசயமாக வழியில்

நெடுஞ்சாலையில் ஒரு சின்ன ஹோட்டலில் காபி நன்றாக இருந்தது. மற்ற தின்கின்ற பொருள்கள் எல்லாம் சுமார். ஒரு லோக்கல் ‘பேக்கரி’ தயாரிப்பில் தேங்காய் ‘பன்’ மற்றும் ‘கேக்’ கிடைத்தது. பசியில் பத்மாவிடமிருந்து பேச்சு மூச்சு இல்லை. ஒரு வழியாகக் கிடைத்ததைத் தின்றுவிட்டு மீண்டும் ‘பஸ்’ ஏறினோம். இதுவரை பேருந்து மட்டும்தான் மட்டமாயிருந்தது; ஆனால் சாலை பரவாயில்லை. இதன் பிறகோ, சாலையும் மட்டமாக இருந்தது. ஆனாலும் இந்த அசௌகரியங்கள் ஒன்றும் பெரிய பொருட்டாகத் தெரியவில்லை!

கார்த்தால எழுந்து நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் கிடைத்த ஓசியான பிரேக்பாஸ்ட் (இன்க்ளூடட் இன் ரூம் ரெண்ட்) வேண்டாம் என்று சொல்லி அருகில் இருக்கும் மிகப் பிரசித்திப் பெற்ற மெஸ் சென்றோம். அந்த மெஸ்ஸில் மிகப் பிரமாதமான இட்லி, தோசை மற்றும் காஃபி கிடைக்கும் என்று சொன்னார்கள். சிறு வயதில் பத்மாவின் அம்மா

அந்த மெஸ்ஸூக்குச் சென்று அதன் உணவு வகைகளைச் சுவைத்ததைப் பற்றி நிறைய கூறியிருக்கிறார். அந்தக் காலத்தில் ஓட்டலுக்குச் செல்வது என்பது, அதுவும் மாயவரத்தில், மிகவும் அரிதானதாக இருந்திருக்கும். அப்படியொரு சூழலில் யாரோ ஒருவருக்கு மாயவரத்தில் ஓர் ஓட்டல் ஆரம்பிக்கும் தைரியம் எப்படி வந்ததோ! சென்னையில் இருக்கிற நிறைய 'நாங்க மாயவரத்துக்காரர்கள் ஆக்கும்' என்று சொல்லித் திரியும் நபர்கள் எல்லாரும் அந்த மெஸ்ஸூக்குக் கண்டிப்பாகச் சென்று வருமாறு எங்களுக்கு அன்புக் கட்டளை இட்டார்கள். ஆனால் அதெல்லாம் அந்தக் காலம் என்று அறிந்து கொண்டோம். அந்த மெஸ் வெறும் பழைய பெயரில் ஓடிக் கொண்டிருக்கிறது. மாயவரத்தில் நம்ம சாப்பாட்டுக்குக் கஷ்டம்னா அப்புறம் என்னத்தைச் சொல்ல? சமீபத்தில் மறுபடியும் மாயவரம் போன போது, அதே மெஸ் பழையபடி மிக நன்றாக இருந்தது என்பது மிகப் பெரிய சந்தோசம்.

எங்கள் சிறுவயதில் இருவர் வீட்டிலும் டிபிக்கல் மிடில் கிளாஸ் லிவிங்தான். உறவுக்காரர்கள் வீடுகளுக்குக் கல்யாணம் போன்ற விசேஷங்களுக்காக
மட்டுமே பிரயாணம்; ஹாலிடே, சைட் சீயிங் எல்லாம் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை; அதற்காக நாங்கள் ஏங்கியதும் இல்லை. “டேக் லைஃப் அஸ் இட் கம்ஸ் டைப்”, ஒவ்வொரு கால கட்டத்திலும் சின்னச் சின்ன சந்தோஷங்கள் பொதிந்திருந்தது என்னவோ உண்மைதான். வருஷா வருஷம் திருப்பதி ட்ரிப் - ஒரு பத்து பதினைந்து பேர்களுக்குக் குறையாமல் - கடக்கு முடக்கான பஸ், நெரிசல், புளியோதரை, இட்லி, தயிர் சாதம், அடுத்த நாள் வரையில் - முடிந்தவரை ஓட்டி விட்டு, நேராக தரிசனம் முடித்து கையோடு பஸ் பிடித்து, வீட்டுக்கு வந்து சமைத்துச் சாப்பிடுவதற்குள்... அப்பப்பா! இப்போ மாதிரி டாக்ஸி, ஹோட்டல், ஸ்விக்கி என்பதெல்லாம் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது!

அதுக்கப்புறம் மிகவும் சௌகரியமாக டாக்ஸி பயணம் ஆரம்பமானது. டாக்ஸி டிரைவரிடம் பேச்சு கொடுத்தோம். பதினைந்து வருடங்கள் சென்னையில் வண்டி ஓட்டிக்கொண்டிருந்ததாகக் கூறினார்.

ஓட்டுநர் - “சென்னையில தான் வண்டி ஓட்டிக்கிட்டு இருந்தேன்; டீமானிடைசேஷன்ல ரொம்ப அடிபட்டுருச்சு; சென்னையில் சம்பாத்தியம் அதிகம், ஆனால், செலவு அதைவிட அதிகம். சென்னையில வரது எங்க போகுதுன்னே தெரியாம இருந்துது; இங்கே வீடு இருக்கு; செலவும் கம்மி; கெட்ட பழக்கத்துக்குப் போற சான்ஸும் கம்மி. அதான் ஊரோட வந்துட்டேன். ஏங்க ஒரு டவுட்- பொண்ணை ஸ்கூல்ல சேக்கனும்- சிபிஎஸ்இ ஸ்கூல்தான் நல்லதுன்னு சொல்றாங்க- ஆனா என்ன 50000 ரூபா டொனேஷன் கூசாம கேக்குறாங்க; எப்படியாவது தேத்திடலாம்னுதான் இருக்கேன்;

இல்லேன்னா நிலத்தை அடகு வெச்சா கூட பரவாயில்லை; வீட்டுலே அவுங்க ரொம்ப விரும்புறாங்க; பெரிய வீட்டுப் பசங்க மாதிரி டை கட்டிக்கிட்டு நம்ம புள்ளகளும் ஸ்கூல் போவணும்னு; சரி நகை நட்டா கேக்குறா; படிப்புக்குத் தானே கேக்குறாங்க - நியாயம் தானே - நமக்குத்தான் இந்த பொழப்பு - பசங்க ரெண்டும் பெரிய படிப்பு படிக்கணும்னு கனவு கண்டுக்கிட்டு இருக்கேன்; மஹமாயீ மனசு வெக்கணுமே." கார் ஓட்டுநர் கேட்க...

பத்மா: "முதல்ல ஒண்ணு புரிஞ்சுக்கோங்க; எல்லா பாடத்திட்டமும் அந்த வயசுக்கு என்ன தேவையோ அதைத்தான் சொல்லிக் கொடுக்கச் சொல்லுது - அது அரசு பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, இன்டர்நேஷனல் ஸ்கூலாக இருந்தாலும் - ஆனா எங்க வித்தியாசம்னா - சொல்லித்தர்ற விதத்துல அம்மாவோ அப்பாவோ

ஒருவராவது குழந்தை என்ன படிக்குது, அதுக்கு நம்ம உதவி எங்கே தேவைப் படுத்து, அப்படின்னு தினமும் அந்த குழந்தைகூட நேரம் செலவிட்டா தான் அந்த குழந்தையால மேலே வர முடியும். இப்ப எங்களையே எடுத்துக்கோங்க - என் ஹஸ்பண்ட் அரசு உதவி ஸ்கூலில் தமிழ் வழி கல்வி - நான் தனியார் பள்ளி ஆங்கில கல்வி - அறிவியிலேயோ அல்லது வேலை வைப்பிலையோ ஒண்ணும் பெரிய வித்யாசம் இல்லை - ஆனா இப்ப சூழ்நிலை மாறி வியாபாரத்தனம் அதிகமானதுனால இது ரொம்பப் பெரிய விஷயம் மாதிரி தோணுது. Englishஐ ஒரு மொழியாகக் கத்துக்கிட்டாலே போதும்தான் - என்ன செய்ய - நுனி நாக்கு ஆங்கிலத்துக்கு இங்க அவ்ளோ மதிப்பும் மரியாதையும் இருக்கத்தான் செய்யுது - பக்கத்து ஸ்டேட் கேரளாவில் பிரதானமாக அவங்க மொழியிலேயே தான் படிக்கிறாங்க

- பதினோராவதிலிருந்து தான் இங்கிலீஷ் மீடியம்.

எது எப்படியோ நீங்க உங்க வீட்டுக்குப் பக்கத்துல இருக்கற நல்ல அரசு பள்ளியைப் போய்ப் பார்த்து விசாரிச்சு சேர்த்து விடுங்க - அது மட்டும் போதாது. இந்த டொனேஷனுக்குக் கொடுக்கற காசை அந்தக் குழந்தைக்கு அதன் தனித் திறனை வளர்த்துக்க அப்புறம் நிறையப் புத்தகங்கள் வாங்க செலவு செய்யலாமே? என்ன நான் சொல்றது?

மேலும் RTE சட்டம்படி உங்க வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற தனியார் பள்ளிக்கூடத்துல ஃப்ரீ சீட் கிடைக்கக்கூட வாய்ப்பு இருக்கு; அந்த வெப்சைட்டைப் பார்த்து அப்ளை பண்ணுங்க”.

வேலை தேடி நகரத்திற்குச் சென்று, அந்த நகர வாழ்க்கையை வாழ முடியாமல், மீண்டும் ஊர்ப்பக்கம் செல்லும்

இவர்களின் நிலைதான் என்ன? நம் நாட்டின் வருங்கால சந்ததியினருக்கு தரமான கல்வி இன்னும் ஓர் எட்டாக் கனியாகவே இருக்கிறது...ச்சே!

கிராமங்களின் பின்தங்கிய நிலை, நகரங்களுக்கு குடிபெயர்தல்; அந்த வாழ்க்கை நகரமா நரகமா என்ற புரியாத ஒன்று. இதன் விளைவு - சமூகத்தில் வளர்ந்து கொண்டே போகும் ஏற்றத் தாழ்வுகள், அரசாங்கத்தினால் (எந்த அரசு எந்த கட்சி வந்தாலும் மாறாத நிலைமை) நல்ல இலவசக் கல்வி மற்றும் பேசிக் அமீனிடிஸ் கொடுக்க முடியாத நிலை - இந்தியாவில் இருந்து கொண்டு இதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. ‘நார்வே’ போன்ற நாடுகளில் எல்லாம், தரமான கல்வி, மருத்துவம் ஆகியவை இலவசம் என்று படிக்கிறோம். பொருளாதார ஏற்றத் தாழ்வு இருந்தாலும், அடிப்படை வசதிகளும் வாய்ப்புகளும், எல்லா மக்களுக்கும் வஞ்சனை இல்லாமல் கிடைக்கின்றன.

அந்த சிந்தனைகள் ஒரு புறம் இருக்க, அன்றைய நாள் முழுவதும்

நிறைய கோயில்கள் சென்றோம். ஒவ்வொரு ஊராகப் பார்த்த ஒவ்வொரு கோயிலுக்குப் பின்னாலும் ஒரு கதை. அந்தக் கதை நிஜமா இல்லையா என்றெல்லாம் ‘கமல் பாஷையில்‘ ஆராய்ச்சி செய்யாமல் அனுபவிக்க வேண்டும். லாஜிக்கை கொஞ்சம் பின்னுக்குத் தள்ளி விட்டால், இன்னுமொரு சகாப்தத்தை நோக்கி பயணிக்கலாம். பக்தி இலக்கிய பொக்கிஷத்தில் மூழ்கி விடலாம். ஒவ்வொரு தூணிலும் இருக்கும் சிற்பங்களில் இருக்கும் வேலைப்பாடுகளின் அழகிலும் நேர்த்தியிலும் நாம் தொலைந்து போகலாம்!



படம் 6: sculpt

பல அரிய கலைகள் - பாட்டு, நடனம், சிற்பம், ஓவியம், உணவு என பல கலைகளின் பிறப்பிடம் நம் நாடு - ஒவ்வொன்றிலும் ஓர் உன்னதம்! தேர்ச்சி! இவைகளின் அருமையை அறியாத சமூகம்; நமது நாட்டு கலைகளின் மகத்துவமும் அதன் uniquenessஐயும் இந்த generation தெரிந்து கொள்ளாமலேயோ அல்லது சரிவர புரிந்து கொள்ளாததனாலேயே அது நம்மை விட்டுச் சென்று விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஏழு எட்டு ஆண்டுகள் ஹிஸ்டரியையும் ஜாகிரபியையும் மனப்பாடம் செய்து

என்ன லாபம்? நம் மொழியின் மீது இயல்பான பற்றும் நம் கலாசார சின்னங்களின் மீது பெருமையும் அதை பாதுகாக்கும் பொறுப்பையும் இந்தக் கல்வித் திட்டம் அளிக்காதது வேதனைக்குரியது அல்லவா? பொதுவாக பெற்றோர்களுக்கும் இதைப் பற்றிய சிந்தனையோ அறிந்து கொள்ளும் ஆர்வமோ இருப்பதாகத் தெரியவில்லை. எதுவுமே வெள்ளித் திரையில் வந்தால் மட்டுமே அதற்கு ஒரு மவுசு; கள்ளினால் போதையுற்றவர்கள் போல சினிமா மோகம் நம்மவர்களை ஆட்கொண்டிருக்கிறது; சினிமா பாட்டு, சினிமா நடனம் என்று தங்கள் வாழ்க்கையை அதைச் சுற்றியே அமைத்துக் கொள்கிறார்கள். நம் மக்களுக்கு

நம் கலாச்சாரம் மற்றும் கலைகளின் தொன்மையையும் பெருமையையும் எப்படியாவது பரப்ப முயற்சிக்க வேண்டும். கோயிலுக்குச் செல்வதும், பொட்டு வைத்துக் கொள்வதும், சம்பிரதாயங்களை கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதும் கலாச்சாரம்

ஆகாது; இவைகள் பண்பாட்டின் “எக்ஸ்ட்டேர்னல் மார்க்கர்ஸ்” - கடைப்பிடிப்பது சுலபம் - அவைகளில் ஊறி, அதன் உட்கருத்துக்களைப் புரிந்து கொண்டு, ஆழ்ந்து அனுபவித்து அதைப் பாதுகாத்து, வரும் சந்ததிகளுக்கு அதை நல்ல நிலையில் நாம் விட்டுச் செல்வது நம் கடமை அல்லவா? ஒரு சாதாரண பூ தொடுப்பது முதல், கோலம் போடுவது, நம் பாரம்பரிய உணவு வகைகளைப் பற்றி தெரிந்து இருப்பது, நம் மொழி, அதன் இலக்கியங்கள் இவைகளைப் பற்றி அறிந்தவர்களாக இருப்பது எவ்வளவு முக்கியம் என்று உணர்கிறோம் அல்லவா? இந்தப் புரிதல் இல்லாமல் நம் சமூகம் எவ்வாறு முன்னேற்றம் அடைய முடியும்? வரலாறு கூறும் செய்திகளை நாம் தெரியாதவர்களாக இருந்தால், நாம் முழுமையானவர்களாக இருக்க முடியாது - பண்டைய காலத்தினரின் நல்ல பழக்கங்களையும் வாழ்வு முறைகளையும் அறிந்து கொண்டு அதில் இருக்கும் நல்லவைகளை எடுத்துக் கொள்ளவும், தவறுகளைத்

தொடராமல் இருப்பதற்கும் வரலாறு ஒரு திறவுகோல்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அதனுடைய கலை இலக்கியங்களின் வளர்ச்சியை கண்டு மதிப்பிடலாம் அல்லவா? கலை, இலக்கியம் சமூகத்தின் கண்ணாடி மாதிரி, அந்த காலகட்டத்தையும், வாழ்க்கை முறையையும் பிரதிபலிக்கின்றன. “நடுவில் சில பக்கங்களைக் காணோம்” என்கிற மாதிரி, நடு வழியில் நாம் எதையோ தவறி விட்டு விட்டோமோ என்றே நினைக்கத் தோன்றுகிறது. அந்த காலத்துடைய ‘கலெக்ட்டிவ் விஸ்டம்’ இப்போதைய சந்ததியினருக்குச் சேரவில்லையோ என்ற நினைப்பு எழாமல் இல்லை. முகலாய மற்றும் ஆங்கிலேயே குடியேற்றத்தினால் வந்த வினையோ? அதற்காக
முகலாயரையோ, ஆங்கிலேயரையோ குறை கூறுவதற்கில்லை; நம் கலாச்சாரத்தையும்
அதனில் இருந்து நாம் பெற்றிருக்க வேண்டிய நல்ல சமாச்சாரங்களையும்

கொஞ்சம் தொலைத்து விட்டோமோ என்று தோன்றுகிறது. நம்மை ஆள்பவரைப் பின்தொடர்வதையும், அவர்களைப் பார்த்து பிரமிப்பதையும் ‘ஸ்டோக்ஹோல்ம் ஸின்ரோம்’ என்று சொல்வார்கள். நம்மில் பலபேர் ஆங்கிலம் பேசுவதைப் பெருமையாக நினைக்கிறோம்; அவர்களுடைய வாழ்க்கை நெறிகளை, நமக்கு இடர்பாடு இல்லாமல் ஒத்துப் போகும் விஷயங்களில், பின்பற்றப் பாடுபடுகிறோம். ஒன்றும் தவறில்லை; ஆனால் நம்முடைய வேர்களை அறிந்து கொள்ளாமல் இருப்பது நம்முடைய நஷ்டம். “ஸ்.ஓ.ஏ.ஸ்” என்கிற லண்டனில் உள்ள பல்கலைக்கழகத்தில், நம்முடைய திருவள்ளுவர் சிலையைப் பார்த்தால், நாம் விட்டதை வெள்ளைக்காரர்கள் பிடித்துக் கொள்வார்கள் போல் இருக்கிறது. லண்டன் ஓர் ஆச்சர்யமான நகரம். எவ்வளவு ‘மாடர்ன்’ ஆக இருந்தாலும் எந்த அளவிற்கு பழமையைப் போற்றி பாதுகாக்கிறார்கள், எவ்வளவு

முக்கியத்துவம் கொடுக்கிறார்கள், எவ்வளவு 'museums' நல்லபடியாக இயங்குகின்றன என்பதை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. லண்டனில் ஒரு போட்டோ கண்காட்சி நடத்தினார்கள். அதில் இரண்டு வகையான போட்டோக்கள். ஒரு தொகுப்பில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த போட்டோக்கள். இரண்டாம் தொகுப்பில் அதே இடங்களில் அதே ஆங்கிளில் சமீபத்திய போட்டோக்கள். ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் இல்லை.

நாங்கள் வெளிநாட்டவர்களுடன் குறிப்பாக Europeans உடன் பழகிய தருணங்களில் அந்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் பொதுவாக தங்களுடைய கலாச்சாரத்தைப் பற்றி நிறைய தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்; ஒரு மோனலிசா, ரெம்ப்ராண்ட், பிக்காசோ போன்ற ஓவியத்தைப் பற்றியும், மொசார்ட், வாக்னர், பீத்தோவன் போன்ற பெயர்களுக்கும் அறிமுகமானவர்களாக இருக்கிறார்கள்;

அதைப்பற்றி ஆர்வமும் பெருமையும் உடையவர்களாக தெரிகிறார்கள்; ஆனால், அதே வயதில் இருக்கிற நம் இளைஞர்கள் இதை அவ்வளவாக மதிப்பதில்லை - நம் கலைகளான, வார்லி, மதுபானி, சுங்குடி போன்றவைகளை அடையாளம் காண முடியுமா என்பது சந்தேகம்; எம்.எஸ் சுப்புலக்ஷ்மி, பீம்சென் ஜோஷி, பத்மா சுப்ரமண்யம் போன்றவர்களை யார் என்றே தெரியாதவர்கள் - ஒரு பாரம்பரிய இசைக்கச்சேரி அல்லது ஒரு நடன நிகழ்சியை ஒரு முறை கூட பார்த்திராதவர்கள் நிறைய பேர் இருப்பது ஒரு வருத்தமான விஷயம் அல்லவா? சமூக ஏற்ற தாழ்வுகளும், சாதி மத வேறுபாடுகளும், ஒரு விதமான சிந்தகனையையும் தூண்டாத பாட திட்டமும் இதற்கான காரணங்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. நம்முடைய பெருமை மிக்க பழைய காலத்தினையும் அதன் ஞாபகங்களையும் கோயில்கள் மூலமாகவும் அதன் ஓவியங்கள், சிற்பங்கள், அதைத் தழுவிய இயல்

இசை நாடகம் மூலமாக ஓர் அறிமுகம் கொள்வது என்பது மிக அவசியம் என்றே தோன்றுகிறது.

**நம்முடைய பழமையை அறிந்து கொள்ள வாய்ப்பாக, நாங்கள் சென்ற இடம்... அம்பாள் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கும் இடம், மிக முக்கியமான சக்தி பீடங்களில் ஒன்று.**

# திருமீயச்சூர்

**ஸ்வாமி - மேகநாத ஸ்வாமி. அம்பாள் - லலிதாம்பிகை.**

“ஸ்ரீ சக்ர ராஜ சிம்ஹாசனேஸ்வரி ஸ்ரீ லலிதாம்பிகையே” என்ற மகாராஜபுரம் சந்தானத்தின் குரலில் ஒலித்த இந்தப் பாடல் நினைவுக்கு வருகிறது. ஸ்ரீசக்கரத்தின் மேல் கம்பீரமாக உட்கார்ந்து இருக்கும் லலிதாம்பிகை.

நாவுக்கரசரால் பாடப்பட்ட ஸ்தலம்:

“தோற்றுங் கோயிலுந் தோன்றிய
இருந்திருப்போமோ கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்

கேற்றங் கோயில்கண் டீரிளங் கோயிலே.”

“பொன்னம் கொன்றையும் பூவணி மாலையும்
பின்னும் செஞ்சடை மேல் பிறை சூடிற்று
மின்னு மேகலையாளொடு மீயச்சூர்
இன்ன நாள் அகலார் இளங்கோயிலே“

இந்த
வரிகளின் மூலம் இந்தக் கோயிலின் சிறப்பையும், அந்த அம்பாளின் அழகின் வர்ணனையையும் நாம் அறிகிறோம்.

சுமார் 7, 8 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது! கோயிலுக்கு ஏதோ புண்ணியம் பெறுவதற்கு மட்டுமே அல்லாமல் அதன் பின்னணியையும் கொஞ்சம் தெரிந்து கொண்டு சென்றால் அந்த அனுபவம் மேலும் உயர்கிறது.

வழி முழுதும் பச்சை பசேலென்ற வயல்வெளி, அங்கங்கே சின்ன

குளம், குட்டை, மண்ணு ரோடு, குட்டி பறவைகளின் சத்தம்... ஹப்பா.. நகரங்களின் டீசல் புகையின் வாசனையிலிருந்து ஒரு சின்ன விடுதலை... நல்ல வேளை.. இவையாவது இன்னும் மிஞ்சி இருக்கிறதே! மாயவரத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் சுமார் இருபது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

இது முதல் சக்தி பீடம் என்று கருதப்படுவதால், இங்கிருக்கும் அம்பாளை 'ஆதி சக்தி' என்று அழைக்கிறார்கள். 'லலிதா சஹஸ்ரநாமம்' இங்கிருந்துதான் உலகிற்கு அறிமுகமானது என்று நம்பப்படுகிறது. மிகப்பெரிய அம்பாள் - ஐந்து அடி என்று படிக்கிறோம். இந்த கோயிலில் இருப்பது போல் அம்பாள் உட்கார்ந்து கொண்டிருக்கும் சிலை வேறு எங்கும் இல்லை என்றும் கேள்வி. கோயிலைச் சுற்றி வர ஒரே கிராமீய மணம். மிகவும் சாந்தமாகவும் அழகாகவும் இருந்தது. திருப்பதி போன்ற கோயில்களும்

கூட்டமும் அவர்களது ‘ஜருகு ஜருகு’வும் ஒருபுறம்; மறுபுறத்தில் லலிதாம்பிகை போன்ற கோயில்களும் அதன் ஏகாந்தமும், நிதானமும் நம்மை மிகவும் கவர்கின்றன. இந்தக் கோவிலைப் பற்றிய விசேஷம் என்னவென்றால், அம்பாள் ஒரு பக்தரின் கனவில் வந்து கொலுசு செய்து தருமாறு கேட்டுக்கொண்டதுதான்.

ஒரு கற்சிலையில் கொலுசை எப்படி கீழே விழாமல் நுழைப்பது என்ற நியாயமான கேள்வி வந்திருக்கும். இந்தக் கதை உண்மையா இல்லை யாருடைய கற்பனையா என்பது தெரியாது; ஆனாலும் ஆச்சர்யத்தக்க விஷயம் என்னவென்றால் இந்த அம்பாள் கற்சிலையில் கொலுசு நுழைய ஏதுவாக துவாரம் இருப்பதுதான். இந்த விஷயத்தை தெரிந்து கொண்டு கோயிலுக்குச் சென்றால், பெரிய பக்திமான் அல்லாதவர்க்குக் கூட வியப்பு கலந்த ஆச்சர்யம் வருவது இயல்பு!

இதே மாதிரி நுணுக்கமான சிலைகள் பல்வேறு கோயில்களில் உள்ளன. கீழே

தஞ்சை பெரிய கோயிலின் ஒரு சிற்பத்தைப் பாருங்கள். அந்த இடத்தில ஒரு துவாரம் எதற்காக செய்தார்கள் என்று தெரியவில்லை:



படம் 7: dwaram

அந்தக் கோயிலுக்கு வந்திருந்த ஒரு குடும்பத்திலிருந்த ஒரு குழந்தை பத்மாவிற்கு கண்ணாடி வளையல் கொடுத்து மகிழ்ந்தது. வளையல்களைக் கொடுத்த பிறகு அதற்கு ஒரே வெட்கம்; ஓடிப்போய் அதன் அம்மாவின் புடவைத் தலைப்பில் ஒளிந்து கொண்டது. இந்தக் கோயிலில் பெண்களுக்குக் கொடுக்கும்

முக்கியத்துவம் பறைசாற்றும் வகையில் இருந்தாலும்
நமக்குள் இருக்கும் யதார்த்தவாதி நமக்கு அன்றாட வாய்ப்பாக வாழ்க்கையை நினைவுபடுத்துகிறதே - இப்படி பெண்களைப் போற்றும் கோயில்கள் இருக்கும் நாட்டில் பெண்களுக்கு எதிராக
மோசமான விஷயங்களும் நடப்பது எரிச்சலாகத்தான் இருக்கிறது. என்ன செய்ய... ம்ச்ச். தொட்டிலை ஆட்டும் கைகள், உலகத்தை ஆள்வதில்லை. அந்தத் தொட்டிலையே எல்லா காலமும் ஆட்டிக்கொண்டிருக்கின்றன. தொட்டிலை ஆட்டி, சமையல் செய்து, மற்றவர்களுக்குப் பணிவிடைகளைச் செய்து, புதுமைப் பெண்ணாக வெளி வேலைக்கும் சென்று சம்பாதிக்கும் இன்றைய பெண்ணின் நிலைமைதான் என்ன? பெண்மையைக் கடவுளாக போற்றிப் பாடி வழிபடும் தேசத்தில், வீட்டிலிருக்கும் பெண்ணைப் போற்ற வேண்டாம்; குறைந்தபட்சம் அடக்கி ஆளாமல் அடிப்படை சுதந்திரத்தையாவது கொடுக்கலாம்!

பெண்கள் அம்பாள் மாதிரி சாந்தமாக இல்லாமல் காளியாக உருவெடுத்தால் ஒரு வேளை இந்நிலை மாறுமோ?

வேறு ஒரு கோயில் சிற்பத்தின் புகைப்படம்:



படம் 8: kali

இத்தனை எண்ணங்களுடன் வெளியே வந்தால் மனதை லேசாக்கும் விதமாக

வழி முழுதும் ‘ஃபிரெஷ்’ நுங்கு, பதநீர், இளநீர், கரும்புச் சாறு; கொளுத்தும் வெயிலிலும் நிறைய கோயில்களில் நல்ல கூட்டம். அவரவர் தேவைகள், ஆசைகள். திருநெல்வேலி பக்கத்தில் நுங்கு “தெளிவு” என சொல்லப்படும் பதநீரில் போட்டுக் கொடுப்பார்கள். கொஞ்சம் கேட்டால் “தெளிவு”க்குப் பதிலாக கள்ளும் கிடைக்கும் என்று சொல்ல கேள்வி!! **ம்ம்ம்…** next time, maybe!

அடுத்ததாக நாங்கள் சென்றது கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த ஊர்….

**குளத்திற்கும் தேருக்கும் பேர் போன இடம்.**

# திருவாரூர்

**ஸ்வாமி - தியாகராஜர். அம்பாள் - நீலோத்பலாம்பிகை.**

அடுத்து சென்றது திருவாரூர். சங்கீத மும்மூர்த்திகள் மூவரும் பிறந்த ஊர். என்ன ஒரு ‘ம்யூசிகல் ஹெரிடேஜ்‘! ‘ஷேக்ஸ்பியர்’ பிறந்த ஊரான ‘ஸ்ட்ராடபோர்ட்-

அபான்-ஏவோன்' என்ற இடத்திற்கான 'வெப்சைட்டை' பாருங்கள். எப்படி அதை கொண்டாடுகிறார்கள் என்று. அது மட்டும் அல்ல; அதனால் வரும் 'எகனாமிக்' benefits ஐயும் நினைத்துப் பாருங்கள். திருவாரூரை ஏன் நாம் அந்த மாதிரி கொண்டாடுவதில்லை என்ற வருத்தம் மேலோங்கி இருக்கிறது. மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதர் பெரிய கீர்த்தனைகளை இந்த கோயிலின் அம்பாள் கமலாம்பாள் பெயரில் 'கம்போஸ்' பண்ணி இருக்கார். அந்த நவா வர்ண கீர்தனைகள் ஒரு வெஸ்டர்ன் சிம்பொனிக்கு ஈடானவை. ஒரு கொசுறு செய்தி: வாதாபி கணபதி என்கிற பிரபல கீர்த்தனை, இந்த கோவிலிலுள்ள வாதாபி கணபதியைப் புகழ்ந்து பாடியது ஆகும்.

தியாகராஜர் கோயில். அடேங்கப்பா! எவ்வளவு
பெரிய கோயில். கோயிலுக்குள்ளேயே ஒருவர் தொலைந்து போய்விடலாம். அவ்வளவு பெரியது. முப்பது ஏக்கர் பரப்பளவு என்று அறிந்து

கொள்கிறோம். ஒவ்வொரு சன்னதியும் ஒரு கோயில் சைஸில் உள்ளது. மற்ற எல்லா கோயில்களையும் விட அதிக சன்னதிகளை உடைய கோயில் இது. தியாகராயர் சன்னதி மிக கம்பீரமாக இருக்கிறது. அம்பாள் பெயர் கமலாம்பிகை. குளத்தின் பெயர் கமலாலயம். தாமரை பீடம் என்று பொருள். இந்த நாட்டிய ஸ்டைலை 'அஜப தானம்' என்று கூறுகிறார்கள், அதன் பொருள் மூச்சுக்காற்றின் தாளத்திற்கேற்ப கோஷமில்லாத நாட்டியம் என்பதாகும். இந்த உலகத்தில் மன்மதன் எப்படி தன் வேலையை ஆரம்பித்தான் மற்றும் சோமாஸ்கந்தர் கதை என்பதைப் பற்றிய ஸ்வாரஸ்யமான கதைகள் இதன் பின்னணியில் உள்ளன.

வெவ்வேறு விதமான நடனங்களால் சிவனை வழிபடும் ஏழு இடங்கள்:

**தியாகராஜர் கோவில்,** திருவாரூர் - கோஷமில்லாத நடனம்.

**தர்பாரண்யேஸ்வர் கோவில்,** திருநள்ளார் - கள் குடித்தவர்

போல் நடனம்.

**காயாரோஹணஸ்வாமி கோவில்,** நாகப்பட்டினம் - கடலலை போல் நடனம்.

**கண்ணாயிரம் உடையார் கோவில்**, குருமணக்குடி - சேவல் போல் நடனம்.

**ப்ரஹ்மபுரீஸ்வரர்**
**கோவில்,** திருப்பத்தூர் - மலரின் மேல் மிதக்கும் வண்டு போல் நடனம்.

**வைமூர்நாதர் கோவில்,** திருவைமூர் - காற்றில் அசைந்தாடும் தாமரை போல் நடனம்.

**வேதாரண்யேஸ்வரர் கோவில்,** வேதாரண்யம் - அன்னப்பறவை போல் நடனம்.

கள் குடித்தவர் போல் நடனம் என்று படித்தவுடன், ‘ஷாஓலின் ட்ரங்கன் மான்க்’ என்று ஒரு பழைய சினிமா படம் ஞாபகத்திற்கு வருகிறது. அதில் வரும் ஹீரோ கங்-பூ சண்டையில், குடிகாரனின் நடையைப் பின்பற்றி, எதிராளிகளை ஜெயிப்பதாகக் கதை. இங்கே திருநள்ளாறு கோயிலில் ஸ்வாமி ‘கள்’ குடித்தவர்போல் நடனம் ஆடி நம் மனங்களை ஆக்ரமிக்கிறார்!

திருவாரூரில் சிவனைப் பல்லக்கில் ஆடியபடிதான் கொண்டு செல்வார்கள். இதனால் தானோ என்னவோ எதையாவது மெதுவா செய்தால் “திருவாரூர் தேர் மாதிரி ஆடி அசஞ்சு” என்று சொல்வது வழக்கம் ஆச்சோ என்னவோ?

மும்மூர்த்திகளில்
முதல்வரான தியாகராஜர் பிறந்த வீட்டிற்கு எப்படிப் போக வேண்டும் என்கிற அறிவிப்பு பலகை, எவ்வித ஆரவாரமும் இல்லாமல் ஒரு மூலையில் அறிவித்துக் கொண்டிருந்தது. அதாவது அங்கு இருந்ததே ஆச்சரியம்தான்!

ஷ்யாமா சாஸ்திரிகள் வசித்த வீடு தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி அம்மன் கோயிலின் பின்புறத்தில் உள்ளது. ஓர் அறிவிப்பு பலகை எதுவும் இல்லாமலேயே! இப்பொழுது அந்த வீட்டில் சாஸ்திரிகளின் descendant (எள்ளு பேத்தியோ?) ஒருவர் வசிக்கிறார்.



படம் 9:  shyama

**அடுத்ததாக ட்ரங்க் பெட்டி ஊர்._ கடல் காற்றை சற்றே சுவாசிக்கலாமே.**

# நெகபடாம்

**ஸ்வாமி - காயாரோஹணஸ்வாமி .**
**அம்பாள் - நீலாயதாக்ஷி.**

நெகபடாம் என்று வெள்ளையர்கள் ஆட்சி காலத்தில் அழைக்கப்பட்ட நாகப்பட்டினம்.

அழகான கடற்கரை, குட்டி மீனவத் துறைமுகம் கொண்ட ஊர். நகரமும் இல்லாமல் கிராமமும் இல்லாமல், இரண்டுங்கெட்டான் இடம்.

மல்லிப்பூவும் கருவாடும் சேர்ந்து மணம் வீசுகிறது. ரசிப்பதற்கு ஒவ்வொன்றும் ஓர் ஈர்க்கும் வாசம். "மனம் இருந்தால் மார்க்கபந்து", கமல் சொன்ன மாதிரி! நாகப்பட்டினம் என்ற பெயரே, ஆதிசேஷன் சிவனை வழிபட்டதால் வந்தது என்ற ஒரு வரலாறு உண்டு.

ஆழ்வார் பாசுரமும், துஆவும் ஒலிபெருக்கிகளில்! கபீர் சொல்லியிருப்பது தேவையில்லாமல் ஞாபகத்திற்கு வருகிறது: "கடவுள் என்ன காது கேட்காதவரா, ஏனிந்த வெளிப்பாடும் சத்தமும்?"

**மற்றும் சீக்கிய குரு ஒருவரும் சொல்லியிருக்கிறார்:**

"சாஹிப் சதா ஹதூர் ஹை கியா
ஔசீ க்ரெஹி புக்கார்"

"கடவுள் நமக்குள்ளேயே எப்போதும் இருக்கிறார், அவரிடம் எதற்காக இப்படி சத்தம் எழுப்புகிறோம்?"

சரி, இப்போது இங்கே அமைந்திருக்கும் நீலாயதாக்ஷி கோயிலைப் பார்ப்போம்:

“உன்னை அல்லால் வேறே கதி
இல்லை அம்மா
உலகெலாம் ஈன்ற அன்னை
என்னை ஒரு வேடமிட்டு உலக
அரங்கில் ஆட விட்டாய்
என்னால் இனி ஆட முடியாது
திருவுள்ளம் இறங்கி ஆடினது
போதுமென்று ஓய்வளிக்க
நீயே மீனாக்ஷி , காமாக்ஷி,
நீலாயதாக்ஷி.”

“காயாரோகணேசம்” என்று பாடலில் இந்தக் கோயிலைப் பற்றி வருகிறது. ரொம்ப நிதர்சனமான உண்மை. இந்தக் கோவிலின் முகப்பு மற்ற கோயில்களை விட மிக வித்தியாசமாக இருந்தது. அப்புறம்தான் தெரிந்தது, இந்தக் கோயில் “லாகுலிசா” என்கிற குஜராத்தைச் சேர்ந்த சிவனை வழிபடும் ஒரு பிரிவினரால் கட்டப்பட்டது என்று. அங்கிருந்த தியாகராஜர் சிலை ‘லாபிஸ்

லாஸுலி' என்று சொல்லப்படுகிற கோமேதகத்தால் செய்யப்பட்டது.

சிவனின் பெயர் காயாரோஹண ஸ்வாமி. நீல நிறக் கண்ணுடைய அம்பாள். ஏனென்றால், அம்பாளின் கருணை கடல் போல் விசாலமானது, ஆகவேதான் நீல நிறக் கண்கள். இந்தக் கோயிலின் 'ஆர்கிடெக்ச்சர்' ரொம்பவே வித்தியாசமாக இருக்கிறது. ரொம்பப் பழைய கோயில். அமைதியாக, ரொம்பக் கூட்டம் இல்லாமல்... அம்பாள் சிலையை அமைத்தவர் ரொம்ப ரசிச்சு அழகாகச் செய்திருக்கிறார். மிகவும் நேர்த்தியான சிற்பம். நந்தியின் ஒரு கண் சிவனின் மேலும், மற்றொரு கண் அம்பாளின் மேலும் இருக்கிறது. இதை இரட்டைப் பார்வை என்று கூறுகிறார்கள். கண் கோளாறு உள்ளவர்கள் இங்கு வந்து வழிபடுகிறார்கள், அவர்களின் குறை சரியாகிவிடும் என்ற நம்பிக்கையில்.

என்னுடைய மூத்த அக்காவின் பெயர் நீலா என்கிற நீலாயதாக்ஷி என்பதால், இந்தக் கோயிலுக்குள் நுழையும்போது ஓர் "ஆஹா" moment. என் பெற்றோர்கள்

இந்தப் பெயரை என் அக்காவுக்கு எதனால் வைத்திருப்பார்கள் என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை. Maybe because Dad was posted there?

அம்பாளின் ஐந்து வாழ்க்கை கால கட்டங்களில் இதுவும் ஒன்று.

1. **காசி விசாலாக்ஷி** - குழந்தை.
2. **காஞ்சி காமாக்ஷி** - சிறுமி.
3. **நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி** - கன்னிப்பெண்.
4. **திருவாரூர் கமலாம்பிகை** - இளம் மங்கை.
5. **மதுரை மீனாட்சி** - திருமணமான பெண்.

இதில் ஓர் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ஹிந்து கோவில் அம்பாளான நீலாயதாக்ஷியும் கன்னிப்பெண்; அருகிலிருக்கும் கிறிஸ்தவ வேளாங்கண்ணி மாதாவும் கன்னிப்பெண். மதங்களுக்குள் என்ன பெரிய வித்தியாசம்? நமக்குள் ஏன்

மதங்களை வைத்து வித்தியாசம் பார்க்கிறோம்?

**கொசுறு:**

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பெரிய சண்டை நடந்த இடம் நாகப்பட்டினம் என்று படிக்கிறோம்.

நாகப்பட்டினம் ஒரு காலத்தில் அலுமினியத்தில் செய்த ‘ட்ரங்க்’ பெட்டி தயாரிப்பில் புகழ் பெற்ற இடம். இப்போதும் சில கடைகளில் அத்தகைய பெட்டிகளை விற்பனை செய்கிறார்கள். இந்தக் கால கட்டங்களில் அத்தகைய கனமான, மற்றும் சுழல் சக்கரங்கள் இல்லாத பெட்டிகளை யார் வாங்குகிறார்கள் என்பது புரியாத புதிர்! இந்தப் பெட்டிகளைத் தூக்குவதற்கு “போர்ட்டர்”கள் கிடைப்பது குதிரைக் கொம்புதான்.

நிறைய வருடங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் படித்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. ஒரு பெண்மணி எழுதியிருந்தார்: தனக்கு கணவராக வாய்த்தவர், கல்யாணத்தின்போது,

வரதட்சிணையாக, தங்கத்திற்குப் பதிலாக நாகப்பட்டினம் ‘ட்ரங்க்’ பெட்டி வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொண்டாராம். ஏனென்றால் அப்போது தங்கத்தின் விலை ஒரு சவரனுக்கு ரூ.40; நாகப்பட்டினம் ‘ட்ரங்க்’ பெட்டி விலை ரூ.45! இன்றைய இளைஞர்களிடம் இதைச் சொன்னால், ‘பெருசு ஏதோ பெனாத்துகிறது’ என்று நினைப்பார்களோ?

**அடுத்தது நாகபட்டினத்திலேயே அழகே வடிவான பெருமாள்.**

# நாகப்பட்டினம்

**பெருமாள் - சௌந்தரராஜ பெருமாள்.**
**தாயார் - சௌந்தரவல்லி.**
**“சௌந்தர ராஜம் அஷ்ராயே கஜ ப்ருந்தாவன சாரங்கா வருட ராஜம்**
**நந்தா நந்தன ராஜம் நாகப்பட்டன ராஜம் சுந்தரி ராமராஜம் சுரவினுட மஹி ராஜம்.”***

“நான்
யானைகளின் காட்டில் ‘கஜேந்திரனை’ காத்தருளிய சௌந்தரராஜனிடத்தில்

தஞ்சமடைகிறேன். அவரே வரங்களை அள்ளி வழங்குவதில் ராஜா. சௌந்தரராஜன், நந்தனின் அருமை மகன்; நாகப்பட்டினத்தை ஆள்பவன்; அழகிய லக்ஷ்மியின் கணவன்; தேவலோகத்தினரால் புகழப்பட்டவன். அவனே இந்த பிரபஞ்சத்தை ஆள்பவன்.”

பிரிந்தாவன சாரங்கனைப் போற்றும் முத்துசாமி தீக்ஷிதர் இயற்றிய இந்தப் பாடல், அதே பெயருள்ள ராகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மிகவும் அழகான மற்றும் கம்பீரமான பெருமாள் கோயில். பட்டாச்சார்யார் மிகவும் ஸ்ரத்தையோடு ஸ்தல வரலாறு கூறினார். எங்களை “கீழே குனிஞ்சு பாதத்தை சேவிச்சுக்குங்கோ” என்று கூறினார். எந்த அளவுக்கு அவருக்கு தான் இருக்கும் இடத்திலும், செய்யும் வேலையிலும் ஈடுபாடு என்பது அவர் மெனக்கெடும் விதத்திலேயே கண்கூடாகத் தெரிந்தது. கோயிலுக்குச் செல்வது என்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுதல் என்ற

கட்டாயத்திற்காகவோ, புண்ணியத்தை அள்ளிக் கொள்வதற்காகவோ அல்ல; பிறகு என்ன என்று யோசித்தால் அதில் ஏதோ சொல்லத் தெரியாத ஒன்று; ஒரு கனெக்ட் - சில இடங்களில் அதை உணர்ந்தோம் - அந்த பட்டாச்சாரியார் சொன்ன விதத்தில் ஏதோ உண்மையான உணர்வுகள்; தன்னால் இயன்ற அளவில், தன் கோயிலுக்கு வருபவர்களுக்கு ஒரு தெய்வீக உணர்ச்சியை கொடுக்க genuine ஆக முயன்றது போல் இருந்தது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இந்தக் கோயிலைப் பற்றி விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. தென்கலை ஐயங்கார் கோயில் என்பதால் தமிழ் மணம் கமழ்கிறது.




படம் 10: tamil_archanai



படம் 11:  Soundararaja Perumal Kovil

ஏதோ ஒரு வழியில் - கண்களுக்கும் செவிகளுக்கும் ஓர்

இதமான அனுபவம். இன்னும் ஓர் அழகான விஷயம் என்னவென்றால், நகரங்களைத் தவிர மற்ற இடங்களில் நிறைய கோயில்களில் அர்ச்சனை செய்பவர்கள் மிக நேர்த்தியாக, ஸ்ருதி சுத்தமாக, அந்தந்தத் தெய்வங்களுக்கு உரித்தான ராகத்தில் பாடி அர்ச்சனை செய்வது ஒரு போனஸ்... சிட்டியில் அதற்கும் ஒரு '4ஜி ஸ்பீட்' தான்! நகரங்களின் சௌகரியங்களுக்காக எதையோ தேடி, எப்போதும் ஒரு நேரமின்மையை அனுபவிக்கிறோமோ என்று தோன்றுகிறது! நகரங்களில் இருப்பவர்களுக்குக் கிராம வாழ்க்கை பிடிக்கிறது, குறுகிய 'விசிட்'டின் போது. கிராமங்களில் இருப்பவர்களுக்கோ நகர வாழ்க்கையைக் கண்டு ஒரு மோகம். தூரத்துப் பச்சை!

முத்துசாமி தீக்ஷிதர் தன்னுடைய வாழ்நாளில் நிறைய கோயில்களுக்குச் சென்று, அந்தக் கோயில்களைப் பற்றிப் பல அழகான கீர்த்தனைகளை இயற்றி உள்ளார். 'வாண்டர்லஸ்ட்' அவரை பிடித்து ஆட்டுவித்ததோ என்னவோ?

முத்துசாமி தீக்ஷிதர் பற்றிப் படிக்கும்போது வியப்பாக இருக்கிறது. சிறு வயதிலேயே ஒரு நாடோடி சாமியாருடன் நிறைய இடங்களுக்குச் செல்ல இவரை இவருடைய தந்தையார் அனுப்பி வைத்திருக்கிறார். ஆகவே, கிணற்றுத் தவளை போல் இல்லாமல், அவருடைய மனப்பான்மை பரந்து விரிந்து இருந்தது. ‘நோட்டுஸ்வரம்’ என்று சொல்லப்படும் ‘ஸ்டைல்’ அவருக்கே உரித்தானது. ‘செல்டிக்’ மற்றும் ‘பரோக்’ என சொல்லப்படும் ‘வெஸ்டர்ன் ஸ்டைல்’ தாக்கம் இவருடைய இசையில் அதிகமாகத் தெரிகிறது. ‘வெஸ்டர்ன் நோட்ஸில்’ நிறைய கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறார். உதாரணமாக, “சக்தி ஸஹித கணபதிம்” மற்றும் “ஷ்யாமளே மீனாக்ஷி” ஆகியவை. “சந்ததம் பாஹிமாம், சங்கீத ஷ்யாமளே” என்கிற நோட்டுஸ்வரம், இங்கிலாந்தின் தேசிய கீதமான”காட் சேவ் தி கிங்” என்பதைத் தழுவியே இருப்பதாகச் சொல்கிறார்கள். சமஸ்கிருதத்தில் மட்டுமல்ல, ‘மணிப்பிரவாளம்’ என்கிற

பாஷையிலும் எழுதியிருக்கிறார். இது சமஸ்கிருதம், தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய பாஷைகளின் கலவை ஆகும். ‘கட கட’ என்று பல பாஷைகளைக் கலந்தடித்துப் பேசுபவர்களை இதனால்தான் ‘ஒரே மணிப்பிரவாளம்’ என்று சொல்கிறார்கள் போலும்!

## அச்சோ அழகியவா!!!

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கையாழ்வார் நாகப்பட்டினம் சௌந்தரராஜனைப் பற்றி “அச்சோ! அச்சச்சோ!!” என்கிறார். அப்படி மயங்க என்ன காரணம் என்று பார்க்கலாமா?

மயங்கிய ஆழ்வார் :-

திருமங்கையாழ்வார்
பரகால நாயகியாக மாறி, இறைவனின் அழகைத் தோழியிடம் கீழேக் காணுமாறு விவரிக்கிறார். முதல் ஒன்பது பாசுரங்களில் திருநாகை திருத்தலத்தின் பெயரைக் குறிப்பிடாமல் “அச்சோ! ஒருவர் அழகியவா!” என்று பாடியுள்ளார்.

இறுதியான பத்தாவது பாசுரத்தில் மட்டுமே "நாகையழகியாரே" என்று இத்தலத்தைக் குறிப்பிடுகிறார். அந்தப் பாசுரம் பின்வருமாறு:

"அன்னமும் கேழலும் மீனும் ஆய
ஆதியை நாகை அழகியாரை"

**அச்சோ அழகியவா :-**

"பொன்னிவர் மேனி மரகதத்தின்
பொங்கிளஞ் சோதி யகலத்தாரம்
மின் இவர் வாயில் நல் வேத மோதும்
வேதியர் வானவ ராவர் தோழி
என்னையும் நோக்கியென் னல்குலும் நோக்கி
ஏந்திளங் கொங்கையும் நோக்குகின்றார்
அன்னையென் னோக்குமென் றஞ்சு கின்றேன்
அச்சோ அழகியவா?!".

**விளக்கம்**

பொன் போன்ற மேனியும், பொங்கி வழியும் ஒளியுடைய மரகதத்தை இடையினில் ஆரமாக அணிந்து, வாயினால் நல்ல வேதத்தை நவிலும் தேவரான இவர், என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்

அல்குலைப் பார்க்கிறார். என் திரண்ட கொங்கையையும் விடாது பார்க்கிறார். இப்படிப் பார்க்கின்றாரே இவர், “இது எனது தாய்க்குத் தெரிந்தால், அவள் என்னை எப்படிப் பார்ப்பாளோ? என்ன சொல்வாளோ? என்று எனக்குப் பயமாக இருக்கிறது!” என்று தன்னை நாயகியாகப் பாவித்துக் கொண்டு, திருநாகையில் எழுந்தருளியுள்ள சௌந்தரராஜ பெருமாளிடம் மையல் கொண்டு நிற்கிறார் திருமங்கையாழ்வார்.

திருமங்கையாழ்வாரின் கற்பனையின் அழகை ரசித்து “அச்சோ இத்தனை அழகியவா” என்று நமக்கும் சொல்லத் தோன்றுகிறது.

> இதில் வரும் சங்கீதத்தைப் பற்றிய தகவல்கள் எல்லாம் உபயம்: friends and Google ஆத்தா.

சின்ன வயசில் எனக்கு பாட்டு சொல்லி கொடுத்து, அதன் “மனபாரத்தை” சுமக்க முடியாமல், என் பாட்டு டீச்சர் வீட்டை

விட்டு ஓடியே போய்விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கோளேன்.

**அடுத்தது கோடி கோடி பக்தர்களை ஜாதி மத வேறு பாடின்றி அற்புதங்களினால் தன் பக்கம் இழுக்கும் அன்னை.**

## வேளாங்கண்ணி

### ‘பாசிலிக்கா ஆஃப் அவர் லேடி ஆஃப் குட் ஹெல்த்’.

கடலோரத்தில் அமைந்திருக்கும் ரோமன் கத்தோலிக்க கோயில். வேளாங்கண்ணி என்பது “வேலை” என்கிற ஊரின் கன்னிப்பெண் என்று பொருள் கூறுகின்றனர். மூன்று அற்புதங்கள் நிகழ்ந்த பிறகு இந்தக் கோயில் நிறுவப்பட்டது. இன்னமும், இந்தக் கோயிலுக்குச் சென்றால், அற்புதங்கள் பற்றி நிறைய பேசுகின்றனர்.

வெள்ளை வெளேர் என்ற பளிச் கோபுரம், புதிதாக சலவை செய்தது போல்! கட்டிடத்தின் நவீனமும் நேர்த்தியும் நம்மை வெகுவாகக் கவர்கின்றன. வருஷம் இரண்டாயிரத்து

நாலில் ஏற்பட்ட 'சுனாமி'யினால் மிகவும் பாதிப்படைந்த இடம் வேளாங்கண்ணி என்று நினைவுக்கு வரும்போது மனதில் ஒரு பெரிய அழுத்தம். அலை மோதும் கூட்டம்; எங்கே பார்த்தாலும் மக்கள் வெள்ளம்; சுற்றிலும் சிறிய பெரிய கடைகள்; உணவகங்கள்; பல தரப்பட்ட மக்கள்; தென்னை நாற்றுகளுடன், தூக்க மாட்டாமல் தூக்கிக்கொண்டு, கையில் குழந்தை, சாமான்களுடன் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தவர்கள்.

அனைத்து சமூகத்தினரும், குறிப்பாக, ஹிந்துக்கள், நிறைய அளவில் வருகை தரும் விசேஷமான கோயில். பழைய கோவில் ஒருபுறம் இருக்க, புதியதாக கடலுக்கு மிக அருகில் கோயில் எழுப்பியிருக்கிறார்கள். ஹிந்துக்களின் சடங்கான 'அர்ச்சனை'த் தட்டு - தேங்காய், புஷ்பம் உட்பட, நிறைய பக்தர்கள் எடுத்துச் சென்று மாதாவிற்கு அர்ச்சனை செய்து மகிழ்கிறார்கள். மாதாவின் ஆசி பெற்ற தேங்காய் எண்ணெய் இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

மற்ற தேவாலயங்களை போல் இங்கும் பக்தர்கள் மெழுகுவர்த்தி ஏற்றுகிறார்கள். இந்தக் கோயிலில் ஒரு விசேஷம் - வண்டி நிறுத்துவதற்கு உட்பட - எதற்கும் கட்டணம் கிடையாது. அங்கங்கே உண்டியல் வைத்திருக்கிறார்கள். விருப்பப்பட்டால் காணிக்கை செலுத்தலாம். இந்தக் கோயிலைச் சுற்றிய கதைகள் எல்லாம் அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றியவைதான். இந்தக் கோயிலுக்கு வந்திருப்பவர்களும் அங்கிருக்கும் கன்னிகாஸ்திரீகளும் நிறைய அற்புதங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். பத்மா என்னிடம் கேட்டாள், “கடவுளின் மீது வைக்கும் நம்பிக்கைக்கு அற்புதங்கள்தான் காரணம் என்றால், அந்த நம்பிக்கைக்கு அர்த்தம் உண்டா?” சரியான கேள்விதான். ‘லாஜிக்’கான பதில்தான் இல்லை. ஆனால், அன்றாடத் தேவைகளை அடைவதே ஒரு போராட்டமாக இருக்கும் நிலையில் நாம் இருந்தால், நம் வாழ்விலும் ஓர் அற்புதத்திற்காகக் காத்திருப்போமோ என்னவோ?

வேளாங்கண்ணி கோயில், பொருளாதார ரீதியில், நிறையக் கூட்டத்தை வசீகரிக்கிறது. அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் தேவைகள், பிரார்த்தனைகள், நிறைவேறாத ஆசைகள் - எல்லாவற்றையும் தாங்க நம்மை விட ஒரு சக்தி இருக்கிறது என்ற நம்பிக்கைதான் அவர்களை வழி நடத்துகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது.




படம் 12: Velankanni Basilica

நாங்கள் எங்களுடைய வண்டிக்காகக் காத்துக்கொண்டிருக்கும்போது, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிலர்

அங்கிருந்த இலவசத் தங்கும் விடுதிக்காக மேலும் கீழுமாக அலைந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் உடையையும் பேச்சையும் பார்க்கும்போது, எங்கோ ஆந்திராவில் உள்ள கிராமத்திலிருந்து வந்தவர்கள் போல் இருந்தார்கள். அவர்களுடன் வந்திருந்த சிறு குழந்தைகள், “அம்மா, ஐஸ் வாங்கித் தா” என்று கேட்டு படுத்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்கேற்றாற்போல, ஐஸ் விற்கிறவரும் அவர்கள் முன்னாடியே ஐஸ் வண்டியை நிறுத்திவிட்டார். அவர்களுடைய அம்மாவோ சில முறை மறுத்துப் பார்த்தார்; முடியாதபோது, ஐஸ் வாங்கிக் கொடுத்தார். அங்கே நடுவதற்காக பெரிய தென்னங்கன்று ஒன்றை கையில் வைத்திருந்தார்கள். சிறு சிறு பொட்டிகள், முடிச்சுப் போட்ட கட்டப்பை, சிறிதும் பெரிதுமான பொட்டலங்கள். மேலோட்டமாகப் பார்க்கும்போது, “இவர்கள் எதற்காக இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்” என்று தோன்றலாம். இவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டதால்

அவர்களுடைய நிலையில் என்ன மாற்றம் நிகழும்? இந்த மாதிரி அங்கே ஒரே மனித வெள்ளம். அவர்கள் ‘பென்ஸ்’ காருக்கும், ‘ஐ-போனுக்கும்‘ வேண்டிக்கொள்பவர்கள் போல் இல்லை. அன்றாடத் தேவைகளே கடவுளை
வேண்டினால்தான் கிடைக்கும் என்ற நிலை இருந்தால், என்ன சொல்வது?

“வசதி
இல்லாதவர்கள் ஏன் கோயிலுக்குச் சென்று நேரத்தையும், இருக்கும் சொற்ப பணத்தையும் வீணாக்க வேண்டும்? ஏன் தேவையில்லாத வேண்டுதல்களைச் செய்து, அதை நிறைவேற்ற வாழ்க்கையுடன் போராட வேண்டும்?” என்று பல முறை யோசித்திருக்கிறேன். “கோயில்கள் எல்லாம் பணக்காரர்களுக்குத்தான், மற்றும் அவர்களுடைய பொழுது போக்குவதற்குத்தான்” என்றும் நினைத்திருக்கிறேன்.

அந்த
மாதிரி சிந்தனைகள், எண்ணங்கள் எல்லாம் சரி இல்லையோ என்று

இப்போது தோன்றுகிறது. கோயிலுக்குச் செல்வதும், வேண்டுதல்களை நிறைவேற்றுவதும் மக்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கிறது. வசதி இல்லாதவர்கள் மனதில் என்ன மாதிரி சிந்தனைகள் ஓடும்? சமூகமும், சர்க்காரும் எங்களுடைய நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யாதபோது, எங்களிடம் இருக்கும் மிச்ச மீதியையும் பல வழிகளில் பிடுங்கிக் கொள்ளும்போது, எங்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படும்போது, அதைச் சமூகம் கண்டும் காணாதது போல் இருக்கும்போது, எங்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? எங்கள் குடும்பங்களுக்கு யார் உத்தரவாதம் தரப் போகிறார்கள்? பிரார்த்தனையை விட எங்களுக்கு என்ன வழி? அசைக்க முடியாத நம்பிக்கை மட்டுமே எங்களின் ஊன்றுகோல் என்கிற மாதிரியான எண்ணங்கள்தான் என்று நினைத்துக்கொண்டோம். கோயில் பயணம், வசதி இல்லாதவர்களுக்கு, ஒரு புது உற்சாகமும் நம்பிக்கையும், நல்ல எதிர்பார்ப்பையும், பிரச்சினைகளை

எதிர்கொள்ளும் திராணியையும் கொடுக்கிறது என்றேத் தோன்றுகிறது.

இவ்வளவு பிரச்னைகளுக்கு மத்தியிலும், நிறைய பேரால் மனம் விட்டு சிரிக்க முடிகிறது என்றால், நமக்கு என்ன கேடு, சிரித்தபடியே பிரச்னைகளை எதிர் கொள்வதற்கும், வாழ்க்கையை அனுபவிப்பதற்கும்?

எனக்கு
மாதா கோயில்களில் மெழுகுவர்த்தி ஏற்றுவது ரொம்பப் பிடிக்கும். எங்களுக்காக மட்டுமல்லாமல், மற்ற சில நபர்களுக்கு, அறிமுகமானவர்கள், அவ்வளவாகத் தெரியாதவர்கள் - அவர்களின் நல்வாழ்க்கைக்காக, அவர்களின் துயர் துடைப்பதற்காக, இங்கும் மெழுகுவர்த்தி ஏற்றினேன். எங்களால் மற்றவர்களுக்காக என்ன பெரிதாகச் செய்துவிட முடியும் என்று தெரியவில்லை; அவர்களைப் பற்றி ஒரு நிமிடமாவது நம் நினைவில் கொள்ளலாம் என்றேத் தோன்றிற்று. அதனால் அவர்களுக்கு என்ன பயன் என்று சொல்லத் தெரியவில்லை. “பிரார்த்தனை என்பது

என்ன? எனக்கு மட்டும் என்று இல்லாமல், பிறர் நலனுக்காகவும் என்னால் சில மணித் துளிகளைச் செலவு செய்து, அதன் மூலமும் சந்தோஷம் அடையலாம்” என்பதும் ஒரு வகையான பிரார்த்தனை. எங்களுக்குள் மனது லேசாகிப்போன மாதிரி ஒரு ‘ஃபீலிங்’.

**Next stop: யாரும் வருவார் யாரும் தொழுவார் ......**

## நாகூர் - தர்கா

### நாகூர் ஷாஹுல் ஹமீது என்கிற ‘சூஃபி’ துறவி.

சுமாரான கூட்டம், நிறைய கடைகள், பளபள துணி, வாசனை ஊதுபத்திகள் என்று பரபரப்பான விற்பனை; ஒலிபெருக்கியில் தமிழ் இஸ்லாமியப் பாடல்கள் என்று ஒரு கலவை.

> “யாரும் வருவார் யாரும் தொழுவார்
> நாகூர் ஆண்டவர் சன்னதியில்,
> நானும் ஒன்று நீயும் ஒன்று நபிகள்
> நாயகம் முன்னிலையில்”

என்ற மு. க. முத்துவின் பாட்டு நினைவுக்கு வருகிறது.

இந்த ஊர்காரரான நாகூர் ஹனிபாவின் 'கணீர்' குரலில்,

"இறைவனிடம் கையேந்துங்கள் ...."

என்கிற அவருடைய பாட்டு காதில் ஒலித்து கொண்டே இருக்கிறது.

நாகூர் ஷாஹுல் ஹமீது என்கிற 'சூஃபி' துறவியின் கல்லறையின் மீது கட்டப்பட்டிருக்கும் தர்கா. இந்தத் தர்காவைக் கட்ட இந்துக்கள் அதிக அளவில் பங்களித்தார்கள் என்பது வரலாறு. இங்கிருக்கும் ஐந்து ஸ்தூபிகளில் மிகப் பெரியதை தஞ்சாவூர் பிரதாப் சிங் என்கிற மராட்டிய அரசர் கட்டினார் என்பது விசேஷம். வேளாங்கண்ணியைப் போலவே இங்கும் இந்துக்கள் அதிக அளவில் வருகிறார்கள். இங்கு நடக்கும் 'கந்தூரி' என்கிற விழாவில் இந்து மரபைப் பின்பற்றி நாதஸ்வரம் வாசிக்கிறார்கள். தர்காவின் உட்புறத்தில் பெண்கள் செல்ல அனுமதி இல்லை.

ஆண்டாள் பெருமாளை நினைத்து திருப்பாவை இயற்றிய மாதிரி, மீரா கண்ணனை நோக்கி பஜன்ஸ் பாடிய மாதிரி, ரபீஆ அல் பாஸ்ரா என்கிற சூஃபி துறவி எல்லாம் வல்ல இறைவனைப் பாடல்கள் மூலம் அடைய வழிபட்டார். இந்த சூஃபி பெண் துறவியைப் பற்றி இன்னொரு செவி வழிச் செய்தி. இவர் ‘ஹஜ்’ பயணம் மேற்கொண்டபோது, இவருடைய பக்தியை மெச்சி, இவருக்குச் சிரமம் கொடுக்காமல் இருப்பதற்காக, ‘கஅபா’ இடம் பெயர்ந்து அவருக்குக் காட்சி கொடுத்தது என்று கேள்வி! ஒரு தாழ்த்தப்பட்ட பக்தருக்காக, உடுப்பியில் கிருஷ்ணர், அந்த பக்தருக்குச் சௌகரியமாகத் திரும்பி நின்று காட்சி தந்தார் என்கிற கதை மாதிரியே இருக்கிறதே! இந்தக் கதைகள் ஒரு பக்கம் இருந்தாலும், பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சமூகத்தில் கிடைக்கும் பாரபட்சம் குறைந்ததாகத் தெரியவில்லை.




படம் 13: Rabia Al Basri

ஆண்டவரின் மீது பொருத்தப்படும் துணி கூட பரம்பரை பரம்பரையாக

ஓர் இந்துவின் காணிக்கைதான் என்று சொல்கிறார்கள். கையில் கட்டிக்கொள்ள மந்திரித்த கயிறு கொடுக்கிறார்கள். எண்ணெய் போன்ற திரவத்தை விரலில் தொட்டு நாக்கில் நக்கிக் கொள்ளச் சொல்கிறார்கள். பெண்கள் கையில் கயிறு கட்டுவதற்கு முன்னால், “நாங்கள் கட்டலாமா” என்று கேட்டுவிட்டுப் பிறகு கட்டுகிறார்கள். இன்றும் கூட சாதாரணமாகப் பெண்கள் கையில் விற்பனை வளையல் போட்டு விடுவது, முக்கியமாகத் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின்போது, நிறைய இஸ்லாமிய சகோதரர்கள்தான் என்று நம் எல்லோருக்கும் தெரியும். இங்கு இருக்கும் தர்காவைச் சேர்ந்தவர்கள், மற்ற மதத்தினர் - குறிப்பாக இந்துக்கள், இங்கு வருவதன் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். ஆகவே, மற்ற மதத்தினரைப் பற்றியும், அவர்கள் நாகூர் தர்காவிற்குச் செய்திருக்கும் காணிக்கைகளைப் பற்றியும் நிறையப் பேசுகிறார்கள். ‘எகனாமிக் சென்ஸ்’ தான் ‘டிரைவிங் போர்ஸ்’ என்றாலும்

கூட, மத நல்லிணக்கத்தைப் பேணுவது என்பதால் கேட்பதற்குத் திருப்தியாக இருக்கிறது. மத வேறுபாடுகளைப் பகடைக்காயாகக் கருதும் சமயத்தில், இந்த மாதிரி அமைப்புகள் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் நிற்கின்றன.




படம் 14: Nagore Durgah



படம் 15:  Nagore Durgah2

நாகூர் ஆண்டவர் பற்றி நிறைய விஷயங்கள் கேள்விப்படுகிறோம். சென்னை காசிமேட்டில் உள்ள நிறைய மீன்பிடிப் படகுகள் நாகூர் ஆண்டவரின் பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கும், அதன் உரிமையாளர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி. கடலுக்குச் செல்பவர்கள் எல்லோருமே அவர்தான் “அவ்லியா”. இஸ்லாமில் இந்த வார்த்தையை “கடவுளின் நண்பர்” மற்றும் “மக்களின் பாதுகாவலர்” என்ற பொருளில் கூறுகிறார்கள். நாகூர் ஆண்டவரை வழிபடும் இந்துக்கள், அவருக்குப்

படகு உருவம் கொடுத்து, ஏனைய கடவுள்களான மதுரை வீரன், முனீஸ்வரன் ஆகியோருடன் சேர்த்து வழிபடுகிறார்கள்.

சூஃபி மியூசிக் நிறைய கேட்டிருக்கிறோம். 'அலி சாபிரி சகோதரர்கள்' என்ற பாகிஸ்தானிய குழுவின் இசையில் மயங்கி இருக்கிறோம். சில வருடங்களுக்கு முன் நடைபெற்ற அந்தக் கச்சேரிக்கு பத்மா கொஞ்சம் வலுக்கட்டாயமாக, using emotional blackmail, அழைத்துச் சென்றாள். "அட தேவுடா" என்று முதலில் நினைத்துக் கொண்டுதான் சென்றேன். அவையில் உட்கார்ந்து அவர்களுடைய இசையையும் பாட்டையும் கேட்ட பிறகு, எழுந்து வர மனசில்லை. இரண்டரை மணி நேரம் கட்டுண்டு கிடந்தோம். எதையும் ரசிக்கலாம்; அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை நாம் வளர்த்துக்கொண்டால் - an open mind - whether it is food, clothes, music, religion, anything - acceptance is key.

சற்று பின்னோக்கிச் செல்லலாம்;
வருடம் 1947:

ஒரு முக்கியமான காலை வேளையில், இந்திய மக்கள் கண் விழித்தபோது, ஹிந்துஸ்தானி என்ற பொது வழக்கில் இருந்த மொழி திடீரென்று சட்டபூர்வமாக இந்தி என்றும் உருது என்றும் பிரிக்கப்பட்டது. இந்துக்கள் பேசியது இந்தி ஆகவும், இஸ்லாமியர்கள் பேசியது உருது ஆகவும்
உருவெடுத்தன. இதன் விளைவால், பிரேமசந்த் முன்ஷி போன்றவர்களின் தரமான எழுத்துக்கள், உருது என்று கருதப்பட்டதால், பாடப் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டன. மேலும், ஷுக்ரியா, ஜரூர் போன்ற வார்த்தைகள் தூய்மையானவை அல்ல என்று ஒரு கருத்தைப் பரப்பி விட்டது. அதே
மாதிரி உருதுவிலிருந்தும் சமஸ்கிருத வார்த்தைகளைத் தவிர்ப்பதை நியாயப்படுத்தினார்கள். மொழி என்பது மக்களின் எண்ணங்களிலிருந்து தாமாக வருபவை. அது பசி, தூக்கம்

போன்ற ஒரு ரிஃப்ளெக்ஸ். அதில் சமயத்தைப் புகுத்துவது எந்த ஊர் நியாயம்?

அதே
போன்று, நாம் “தமிழில் பேசும்போது வடக்கத்திய வார்த்தைகளையும், பிற மொழி வார்த்தைகளையும் தவிர்ப்போம்” என்று கூறுவதும் இதற்குச் சமானம்தான். ஆனால், தமாஷ் என்னவென்றால், நிறைய வார்த்தைகளைத் தமிழ் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம், அவை தமிழ் வார்த்தைகள் அல்ல என்று தெரியாமலேயே. உதாரணமாக, மன்னிப்பு என்பது தமிழ் வார்த்தை அல்ல என்பது நிறைய பேருக்குத் தெரியாமல் இருக்கலாம். பொறுத்தருள்க என்பதுதான் தமிழ் வார்த்தை. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? சாவியும் தமிழ் வார்த்தை கிடையாது. திறவுகோல் என்பதே அதற்கான தமிழ் சொல். பேசும் தமிழில் நாம் நிறைய பிற மொழிச் சொற்களை, சில சமயங்களில் நம்மை அறியாமலேயே

உபயோகப்படுத்துகிறோம். ஒரு முறை ஓர் ஆட்டோ ஓட்டுனரிடம், “மருந்து கடைக்குச் செல்லுங்கள்” என்று சொன்னபோது, அவர் எங்களை நாட்டு மருந்து கடைக்கு அழைத்துச் சென்றார்! அவருக்கு “பார்மசி” என்கிற வார்த்தையும் தெரியவில்லை. கடைசியாக அவரே வெறுத்துப் போய் எங்களிடம் கேட்டார், “மெடிக்கலுக்குப் போகணுமா?” என்று. இது எப்படி இருக்கு?

இன்னொரு குட்டிக் கதை. ஒருமுறை ஒரு தமிழ் பற்றாளர் ஆட்டோவில் ஏறி, “பேருந்து நிலையம் செல்க” என்று கேட்டு கொண்டாராம். அந்த ஆட்டோ ஓட்டுனருக்கோ புரிந்தும் புரியாத மாதிரி இருந்ததாம். அவர் நேராக “ரயில்வே ஸ்டேஷன்”க்குச் சென்று விட்டாராம். தமிழ் அறிஞர் உடனே அந்த ஓட்டுனரிடம், “நான் ‘பஸ்’ பிடித்து வீட்டுக்குப் போகணும், அதற்குத்தான் பேருந்து நிலையம் போகச் சொன்னேன்” என்றாராம். உடனே, ஆட்டோ ஓட்டுநர் அவரிடம், “அதற்கு ‘பஸ் ஸ்டாண்ட்’ போகணும் என்று தமிழில் சொல்ல

வேண்டியதுதானே?” என்று கோபித்து கொண்டாராம். ஹொவ் ஐஸ் இட்?

மற்ற மொழிகளிலிருந்து வார்த்தைகளை எடுத்து, நம் மொழிக்கு ஏற்றாற்போல் மாற்றிச் சொல்வதை “கடன் வார்த்தைகள்” என்று சொல்வார்கள். நம் கட்டுமரம்தான் ஆங்கிலத்தில் “கட்டமரான்” என்று ஆனது. அதே போல், ‘பக்ஷீ’ என்று ஆங்கிலத்தில், ஓசியில் கிடைக்கும் பொருளுக்குச் சொல்வார்கள். ஓசி என்பதும் ‘ஆன் கம்பெனி சர்வீஸ்‘ என்பதிலிருந்து வந்ததாக இருக்கும். “பக்ஷீ” என்பது பெர்ஷியன் மொழியில் “பக்ஷீஸ்” என்பதிலிருந்து வந்தது. இந்த வார்த்தையை இந்தியில், குறிப்பாக ‘மாமூல்’ என்கிற பொருளில், நிறைய உபயோகப்படுத்துவார்கள். ஆங்கிலம் நிறைய
மொழிகளில் இருந்து வார்த்தைகளைக் கடன் பெறுவதால்தான் பிரபல்யமாக இருக்கிறதோ என்னவோ, சிந்திக்க வேண்டிய விஷயம். மலாய் மற்றும் இந்தோனேஷிய பாஷைகளும் நிறைய ஆங்கில வார்த்தைகளைக் கடன்

வாங்கி இருக்கின்றன. மூளையைக் கசக்க ஒரு கேள்வி: மிதிவண்டி சக்கரத்தில் இருக்கும் “ஸ்போக்ஸ்” என்னும் வார்த்தைக்குத் தமிழ் வார்த்தை என்ன? சத்தியமா எனக்குத் தெரியாது! இதனால்தான் கடன் வார்த்தைகள் நிறைய தேவை.

இப்போது கூகிள் ஜெமினி ஸ்போக்ஸ் என்கிற ஆங்கில வார்த்தைக்கு ஒரு தமிழ் வார்த்தை சொல்கிறது. அது எத்தனை பேர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று தெரியவில்லை. ஆகவே அதை உபயோகப்படுத்த பெரிய தயக்கம்தான்.

ஹிந்தியிலும்
நிறைய கடன் வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. “மாசீஸ்” என்பது ஆங்கிலத்தில் “matches” என்பதிலிருந்து வந்து தீக்குச்சியைக் குறிக்கிறது. இன்னொரு உதாரணம்: “சந்த்ரி” என்கிற இந்தி வார்த்தை ஆங்கிலத்தில் “sentry” என்பதிலிருந்து வந்தது என்று தெரிகிறது.

இது போன்ற கடன் வார்த்தைகள் பல மொழிகளிலும் காணப்படுகின்றன. மொழிகள் ஒன்றையொன்று தொடர்பு கொள்ளும்போது,
சில சொற்கள் அப்படியே அல்லது சற்று மாற்றங்களுடன் மற்றொரு மொழியில் பயன்படுத்தப்படுகின்றன. இது மொழியின் இயல்பான வளர்ச்சியில் ஒரு பகுதியாகும்.

> "Where the world has not been broken up
> into fragments
> By narrow domestic walls"

"மனிதன் தன் பேராசையால் தன்னைத் தானே பல கூறுகளாகப் பிரிக்கிறான்" என்ற தாகூரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது. சாதி, இனம், race, colour, மொழி என்று எண்ணற்ற பாகுபாடுகளை இன்னும் மனிதர்கள் உருவாக்கிக் கொண்டே இருப்பார்களோ... புரியவில்லை.

We will continue to create more and more walls and one day these walls will suffocate us, but until then...

Cannot stop but wonder about the country (India or Bharat - not sure of that even) we are going to leave behind for the future - we seem too small and powerless in comparison to the forces of power, politics, and money which are trying so hard to change the social fabric. It seems futile many a times, but we need to go on with the hope that:

> This too shall change someday, sometime.
> History has proved it time and again that
> nothing lasts and change is inevitable."

And so we marched on and.......

**our next stop was... ஒரு தீவிர பக்தனுக்காக அமாவாசையை பௌர்ணமி ஆக்கிய திருத்தலம்.**

# திருக்கடையூர்

**ஸ்வாமி - அம்ருதகடேஸ்வரர்.**
**அம்பாள் - அபிராமி.**

"விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு

அவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே?”

“எனக்கு மனம் இருக்கிறது, அவளை, வேதங்களில் சொல்லி இருக்கிறபடி வழிபடுவதற்கு என்னிடம் அந்த ராஜ பாதை இருக்கும்போது, நான் எதற்குப் பாவம் செய்து, பாழாய்ப்போன நரகக் குழியில் விழ வேண்டும்?”

இந்தக் கோயிலின் வரலாற்றைப் பார்ப்போம்:

அபிராமி அந்தாதி என்கிற இலக்கிய பொக்கிஷத்தைப் பற்றி சற்று தெரிந்து கொள்வோம். இதை இயற்றியவர் அபிராம பட்டர். அவரது இயற் பெயர் - சுப்ரமண்ய ஐயர். இவர் திருக்கடையூர் கோயிலில் குருக்களாக இருந்தார். மற்றவர்கள் இவரைப் “பித்து பிடித்தவர்” என்று சொல்லுமளவளுக்கு அம்பாளின் மேல் ஆழ்ந்த பக்தியும் அளவில்லாத நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

ஒரு முறை சரபோஜி ராஜா அந்த கோயிலுக்கு வந்திருந்தபோது, “ஒரு சாதாரண கேள்வியைக் கேட்கிறேன். அதற்கு உம்மிடம் பதில் இருக்கிறதா என்று பார்க்கிறேன். இன்று என்ன திதி? கூறவும்” என்று கேட்டார்.

ராஜா ஏன் அந்தக் கேள்வியை, அதிலும் அந்தப் ‘பைத்தியக்காரனிடம்’ கேட்டார் என்று எல்லார் மனதிலும் கேள்விக்குறி. சுப்ரமண்ய ஐயருக்கோ, அம்பாளுடைய பிரகாசமான முகம் மட்டுமே தெரிந்ததால் “இன்று பௌர்ணமி” என்று சொல்லி விட்டார். உண்மையில் அன்று அமாவாசை. அந்தக் கால நடைமுறையின்படி, சுப்ரமண்ய ஐயருக்கு, ராஜாவிடம் பொய்யான பதிலைக் கூறியதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. அன்று இரவு பௌர்ணமியாக இருந்தால், அதாவது, முழு நிலவு தெரிந்தால், தண்டனை ரத்தாகும். அமாவாசையின்போது முழு நிலவு தெரிவதாவது? தன்னுடைய அம்பாள் தன்னை ஒருபோதும் கைவிடமாட்டாள் என்ற அசைக்க

முடியாத நம்பிக்கையுடன், ஒரு பெரிய பலகையை நூறு கயிற்றால் தொங்கவிட்டு, அதில் ஏறி அமர்ந்து கொண்டார். கீழே பெரிய நெருப்பு கனன்று கொண்டிருந்தது. அம்பாளின் மேல் ஒவ்வொன்றாகப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாடலின் முடிவிலும், ஒவ்வொன்றாகக் கயிற்றை அறுத்துக்கொண்டு வந்தார். நூறு செய்யுளுக்குப் பிறகு, எல்லாக் கயிறும் அறுபடும். ஆகவே, அந்தப் பலகை கீழே விழும்போது, சுப்ரமண்ய ஐயரும் சேர்ந்து நெருப்பில் விழுந்து மாள்வார். ஆனால், தன் தீவிர பக்தனின் பாடல்களால் மெய் குளிர்ந்த அன்னை அபிராமி, எண்பதாவது பாடல் முடியும் முன்னரே, அங்கு தோன்றி, தனது மூக்குத்தி ஒன்றை வானத்தில் வீசி எறிந்ததாக நம்பப்படுகிறது. அந்த மூக்குத்தியும், அதில் இருந்த வைரமும், முழு நிலவு போல் வானத்தில் தென்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சரபோஜி ராஜாவும், அங்கிருந்த மக்களும், “அம்பாளே அமாவாசை அன்று ஒரு முழு

நிலவை வானத்தில் உருவாக்கி, அவருடைய உயிரைக் காப்பாற்றி இருக்கிறார்” என்று உணர்ந்து விக்கித்துப் போனார்கள். இவரைப் புரிந்து கொள்ளாமல் இருந்ததற்காக மிகவும் வெட்கப்பட்டனர். அதிலிருந்து அவரை எல்லோரும் ‘அபிராமி பட்டர்’ என்று அழைக்க ஆரம்பித்தார்கள். அதன் பிறகு, அபிராமி பட்டர் என்கிற சுப்ரமண்ய ஐயர், அபிராமி அந்தாதியை முழுமையாக இயற்றி முடித்தார். அபிராமி அந்தாதியை உலகிற்கு அளிப்பதற்காக, கடவுளின் விளையாட்டாகவும் ஒரு சாரார் கருதுகிறார்கள்.

அபிராமி அந்தாதியைப் பொறுமையாக, ஆழ்ந்து வாசிப்பவர்களுக்கு பக்தி ரசத்தையும், இலக்கியச் சுவையையும் அள்ளித் தரும் என்பதில் ஐயமே இல்லை. ஒவ்வொரு செய்யுளின் கடைசி வார்த்தையும், அடுத்த செய்யுளின் முதல் வார்த்தையும் ஒன்றே. அது மட்டுமல்ல, அது ஓர் ‘இன்பினிட் லூப்’ கூட. அதாவது, முதல் செய்யுளின் முதல் வார்த்தையும், கடைசி

செய்யுளின் கடைசி வார்த்தையும் ஒன்றே. எப்படித்தான் அந்த மாதிரி ஒருவர் கற்பனை செய்து எழுத முடியும், அதுவும் மரண தண்டனையை எதிர்நோக்கிக் கொண்டு, என்று நினைத்துப் பார்த்தால், மயக்கமே வரும்! ஏனைய அந்தாதிகள் இருந்தாலும், அபிராமி அந்தாதியே முதன்மையானது என்று கருதப்படுகிறது.

அபிராம பட்டர் அவர்களின் கவிதைக் கடலில் சற்றே மூழ்கலாம்.

அபிராமி அந்தாதியை அர்த்தம் புரிந்து கொண்டு படித்தால் ஆச்சரியமாக இருக்கும்! அந்த அளவுக்கு அம்பாளின் அழகையும் அங்கங்களையும் (without being unnecessarily prudish- I feel we, as a culture, were more open to talking and depicting sexuality - look at our own Sarangapani temple in Kumbakonam and of course the Konark- Enter British with their Victorian values of morality and that’s when I guess we started to become a more hush hush culture) அபிராம பட்டர் வர்ணித்திருக்கிறார்.

“கருத்தன எந்தைதன் கண்ணன,வண்ணக் கனகவெற்பின்
_பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேர் அருள்கூ
_திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
_முருத்தன மூரலும், நீயும், அம்மே. வந்து என்முன் நிற்கவே.

அபிராமித் தாயே! என் தந்தை சிவபெருமானின் கருத்திலும் கண்ணிலும் நின்று விளங்கக் கூடியது பொன் மலையென மதர்த்து நிற்கும் நின் திருமுலையே ஆகும். அம்முலையே நீ உயிர்களிடத்தில் காட்டும் பரிவைக் காட்டுவதற்காக அமுதப் பிள்ளையாகிய ஞானசம்பந்தருக்குப் பால் நல்கியது. இப்படிப்பட்ட அருள்மிக்க கனமான கொங்கையும், அதில் விளங்கக் கூடிய ஆரமும், சிவந்த கைகளில் விளங்கும் வில்லும் அம்பும் நின்னுடைய சிவந்த இதழ் நகையும் என் முன் காட்சியருள வேண்டும்.

அபிராமி அந்தாதியில் மொத்தம் 102 செய்யுள்கள் உள்ளன. முதலில் விநாயகரைப் பற்றிய காப்புச் செய்யுள்.

இறுதியில் பலன் கூறும் செய்யுள். இவை இரண்டையும் தவிர்த்து, அம்பாளைப் புகழ்ந்து நூறு பாடல்கள் உள்ளன.

அபிராமி பட்டர் ஒவ்வொரு பாடலிலும் அபிராமியின் அழகை, கருணையை, சக்தியைப் பலவிதமாக வர்ணிக்கிறார். தன் அறிவையெல்லாம் அம்பாளின் பாதத்தில் சமர்ப்பிக்கும் பக்தியின் உச்சத்தை அந்தாதியில் காணலாம்.

உதாரணமாக, 39 ஆவது பாடலில்,

“உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கொடி குங்குமத் தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என் விழுத் துணையே.”

.... என்று அபிராமியின் நெற்றியில் இருக்கும் குங்குமப் பொட்டை, சூரிய உதயத்திற்கும், மாணிக்கத்திற்கும், செங்காந்தள் மலருக்கும்,

மின்னலுக்கும், குமுத மலருக்கும் ஒப்பிட்டு அழகைப் புகழ்கிறார்.

அபிராமி அந்தாதியை முழுமையாகப் படித்தால், அதன் இலக்கியச் சிறப்பையும், பக்திச் சுவையையும் நன்குணரலாம். அபிராம பட்டரின் கவிதைகள் அவர் அம்பாள் மேல் கொண்ட எல்லையற்ற நம்பிக்கையின் வெளிப்பாடு. அதுவே அவருடைய பிரார்த்தனையின் வடிவம். நாம் எந்த காரியத்தைச் செய்தாலும், அதில் முழுமையாக ஈடுப்படுத்திக் கொள்வதே பிரார்த்தனை என்று எனக்குப் படுகிறது. வெறும் சடங்குகள் பிரார்த்தனையாக ஆக முடியாது என்றே நினைக்கிறேன். இந்தக் கோயில் இப்போது ஒரு வியாபார ஸ்தலமாக ஆகிவிட்டது. அதன் உண்மையான முக்கியத்துவம் அந்த வியாபார இரைச்சலில் மறைந்து போயிற்று என்று நினைத்தால், மனதில் ஏதோ நெருடுகிறது.

நிறைய பேர் சஷ்டியப்த பூர்த்தியை இங்கு கொண்டாடுகிறார்கள். அதற்கு எவ்வளவு ‘டிமாண்ட்’ என்றால், மூன்று வருடங்களுக்கு முன்னதாகவே

பதிவு செய்தால்தான் இடம் கிடைக்கும் என்கிறார்கள். அதே கோயிலில், அவ்வளவாகப் பிழைக்கத் தெரியாத ஒரு வைதீகர் இவ்வாறு கூறினார். அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் கொண்டாடுவது மேற்கத்திய வழக்கம். நம் வழக்கப்படி அறுபது சாந்தி என்றே கூறுவார்கள். அதாவது, அறுபது ஆண்டுகள் இந்த பூமித்தாய் நமக்கு இடம் கொடுத்ததற்காகவும், அதிலிருந்து நாம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டதற்காக நாம் கடவுளுக்குச் செலுத்தும் நன்றிக்கடனே என்றும் கூறி, நிறைய பேர் இதைக் கொண்டாட்டம் என்றே எண்ணிக் கொள்கிறார்கள். மார்க்கண்டேயனுக்கு சிவன் "என்றென்றும் பதினாறு வயது" என்று அருள் வழங்கி, காலத்தை வென்ற இடம் என்பதால், இங்கு சஷ்டியப்தபூர்த்தி செய்தால், தங்களுக்கு இன்னொரு அறுபது ஆண்டுகள் கிடைக்காதா என்ற நப்பாசையில் மனிதர்கள்!

இப்போது அதற்கு வெப்சைட் வேறு. அதில் லிஸ்ட் போட்டிருக்கிறார்கள். ஒரு நாள் பேக்கேஜ் ரூ.9,000 முதல் இரண்டு நாள் பேக்கேஜ் ரூ.52,000 வரை, வரிகள் உட்பட! அதற்கு மேலும் தட்சணை தட்டுகளில் பணம் போட வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். பயணச் செலவு, தங்கும் செலவு, சாப்பாட்டுச் செலவு, மற்றும் இதர செலவுகள் தனி. இங்கே இது மிகப்பெரிய வியாபாரமாக ஆகிவிட்டது. அங்கிருந்த நிறைய குருக்களின் வீடுகளில் வருமான வரி சோதனை நடந்தது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

குருக்களுக்கும் விளம்பரம் தேவைப் போலும். நிறைய வீடுகளில் இருந்த குருக்களின் பெயர்ப் பலகைகள், கோயிலில் இருந்த கடவுளின் பெயர்ப் பலகையை விட மிகப் பெரியதாக இருந்தன.

**அடுத்தது ஏழரை பயம் கொண்டவர்கள் செல்லும் இடம்.**

# திருநள்ளார்

**ஸ்வாமி - தர்பாரண்யேஸ்வரர்.**
**அம்பாள் - பிராணாம்பிகை.**

காரைக்காலில் உள்ளது, பாண்டிச்சேரி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஜோதிடம் பார்ப்பவர்களின் favourite இடமாக ஆகிவிட்டது. ஒன்றுமே தெரியாதவர்கள்கூட ‘எதுக்கும் இருக்கட்டுமே’ என்று ஒரு விசிட் அடித்து விடுகிறார்கள்.

சனி தோஷம் தீர இந்தக் கோயிலுக்கு வருகை தருகிறார்கள். நளனை சனி தோஷம் ஆட்டுவித்த போது இந்தக் கோயிலில் வழிபட்டு, அதனிலிருந்து விடுதலை பெற்றார் என்பது வரலாறு.

ஒரு ராஜா ஓர் இடையனை இந்தக் கோயிலுக்குத் தினமும் பால் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டாராம். அந்த இடையனும் தவறாது பால் கொடுத்து கொண்டிருந்தபோது, அந்த ஊர்த்தலைவர், அதில் தலையிட்டு,

அந்தப் பாலை கோயிலுக்குக் கொடுக்காமல், தனக்கே கொடுக்கச் சொல்லி தொந்தரவு செய்தாராம். பிறகு, அந்தக் கோயில் அர்ச்சகர்கள் அரசரிடம் “பால் தினமும் வரவில்லை” என்று புகார் செய்த போது, அந்த இடையன், ஊர்த்தலைவர் பேரில் இருந்த பயத்தால், ஒன்றும் சொல்லாமல் விட்டார். அதனால் கோபமடைந்த அரசர், அந்த இடையனைச் “சிரச்சேதம்” செய்ய உத்தரவிட்டார். அந்த உத்தரவை நிறைவேற்ற எத்தனித்தபோது, சிவபெருமான் தன்னுடைய திரிசூலத்தால் அந்த இடையனைக் காப்பாற்றினார் என்பது வரலாறு.

சனிக்கிழமைகளில் கூட்டம் அலை மோதுகிறது.

சனீஸ்வரனை வணங்கிவிட்டுத்தான் சிவனை வணங்குகிறார்கள். நமது ‘கர்மா’வின் பலன்களைக் கொடுப்பவர் சனீஸ்வரன் என்று நம்புகிறார்கள். பலன்கள் நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம். நாங்கள்

சென்றது சனிக்கிழமை என்பதால் நிறைய கூட்டம்.

கால் கடுக்க நின்று, நேராகச் சென்று சுவாமியைப் பார்த்து கன்னத்தில் போட்டுக்கொண்டு, “என்னை மட்டும் காப்பாத்து” என்று அவசரமாகக் கோயிலுக்குச் சென்று வீட்டுக்குத் திரும்புவது ஒரு கடமை அல்லது ஒரு கட்டாயம் போலத் தோன்றுகிறது!. அப்படியானவர்களே நிறைய இருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. திருநள்ளாறு போன்ற தோஷம் நீக்கும் கோயில்களில் இந்த trend நிறைய இருக்கிறது. அது ஒரு வகையான contract. எனவே, இந்தக் கோயிலில் கூட்டம் அதிகமாக இருந்ததால், ஸ்தல புராணமோ அல்லது சுற்றி இருந்த மற்ற சன்னதிகளைப் பற்றியோ அவ்வளவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

கோயிலுக்கு மிக அருகாமையில் நல்ல பில்டர் காபி கிடைக்கிறது. விலையும் மிக மலிவு. மறக்காமல் வாங்கி குடித்து “சோர்வு” நீங்கி வரவும். ப்ராஹ்மணர்களுக்கு ஏன் காபி மிக

பிடித்தமான பானம் என்று எங்கள் வீட்டுக்கு வரும் “வாத்யார்” சொல்வார்:

“சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப ஷாந்தயே.”

இதற்கு ஒரிஜினல் அர்த்தத்தைத் தவிர்த்து மாறுபட்ட அர்த்தத்தையும் அவர் சொன்னார்:

“வெள்ளை நிற பால் கொதித்து கொண்டிருக்கிறது.
டிகாக்ஷன் கலர் கறுப்பு.
அவை இரண்டும் சேரும்போது”மாநிற” கலரில் உருமாறுகிறது. “அவா இரண்டு கையால கொடுக்கறா; நாம இரண்டு கையால வாங்கிக்கிறோம்”. ஆக மொத்தம் நாலு கைகள்.
(அதைப் பருகும்போது) நம் முகம் ப்ரகாசமடைகிறது.
நாம் “நம்முடைய சிரமங்கள் எல்லாம் தீரும்” என்று அதைப் பற்றி த்யானம் செய்கிறோம்.”

எப்படி இருக்கு?

**அடுத்ததாக மணப்பாறையில் மாடு வாங்கி இங்கு ஏறு பூட்டலாம். ஸ்டேஷன்ல தரமான பில்டர் காபி குடிக்கலாம்.**

## மாயவரம் மறுபடியும்

**ஸ்வாமி - மயூரநாதர். அம்பாள் - அபயாம்பிகை.**

மீண்டும் மாயவரம் வந்து சேர்ந்தோம்.

மாயவரம் அல்லது மாயூரம் என்பது ஆங்கிலேயர்கள் வைத்த பெயர் என்று நினைக்கிறேன். டின்னெவெலி , த்ரிசினோபோலி, திரிஞ்சிக்கனம் (திருக்கழுக்குன்றம்) என்றெல்லாம் ஆங்கிலேயர்கள் வாயில் நுழைந்த, கடித்து குதறப்பட்ட பல்வேறு இடங்களின் பெயர்கள். அந்த ஊர்களுக்கெல்லாம் ஆங்கிலேய பெயர்களை நீக்கி விட்டு நம்மூர் பெயர்கள்

வைத்ததுபோல், மாயவரத்திற்கும் இப்பொழுது மயிலாடுதுறை என்று பெயர்.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இந்தக் கோயில் காசிக்குச் சமம் என்று கருதப்படுகிறது. பார்வதி “ஒரு முறை பெண் மயிலாகக் கடவது” என்று சிவனால் சபிக்கப்பட்டார். பிறகு, அவர் மைலாப்பூரிலும், மாயவரத்திலும் சிவனை வணங்கி, சாப விமோசனம் பெற்று அபயாம்பாள் ஆகக் காட்சி தருகிறார்.

இந்தக் கோயிலின் கிழக்கு வாசல் கோபுரம் ஒன்பது மாடி கட்டட உயரத்தில் உள்ளது.

இந்தக் கோயிலில் உள்ள குளத்தில் ஐப்பசி மாதம் அமாவாசை அன்று கங்கை மற்றும் காவேரி ஆகிய நதிகளின் நீர் கலந்திருப்பதாக ஒரு நம்பிக்கை. ஆகவே அன்று இதில் ஸ்நானம் செய்தால் பெரும் புண்ணியம் என்று கருதுகிறார்கள். இதை துலா ஸ்நானம் என்று சொல்கிறார்கள்.

மயூர நாட்டியாஞ்சலி விழா என்கிற நம் பாரம்பரிய நடன விழா ஆண்டுதோறும் நடக்கிறது.

அம்பாள்
ஒரு 'கெத்துடன்' இருப்பதாகப்பட்டது, இந்த ஊர்க்காரர்கள் மாதிரி! நல்ல பெரிய கம்பீரமான சிற்பம். இந்தக் கோயிலும் இன்னும் ஐந்து பிற கோயில்களும் காவிரி நதிக்கரை ஓரமாக உள்ளன. இந்த ஆறு கோயில்களும் தனித்தனியாக ஒவ்வொவொன்றும் காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சமம் என்று கருதப்படுகின்றன. பராமரிப்பு சுமார்தான். நிறைய பேர் வருவதில்லை போலும். ஊர் நடுவில் இருந்தாலும், பெரிய கும்பல் இல்லை. பத்மாவின் அம்மா இந்தக் கோயிலுக்கு அவர் வீட்டிலிருந்து, சுமார் மூன்று கிலோமீட்டர் தூரம், சிறு வயதில் அடிக்கடி நடந்தே வந்ததாகச் சொல்லியிருக்கிறார். நாங்கள் சென்றிருந்த சமயத்தில், ஓர் அறுபது வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர், 'கோட்-சூட்' உடன் 'டை' கட்டி (கையையும் கட்டி) வந்திருந்தார். நிறைய வயதானவர்கள் உற்சாகத்துடன்
கோயிலுக்கு வந்திருந்தார்கள். 'சீரியல்'

பார்த்துக் கொண்டு வீட்டில் அழுவதை விட 'பெட்டர்' என்று தோன்றியது.

கோடைக்காலம் ஆனதால் எங்கே பார்த்தாலும் வாசனை வீசும் மல்லி! ஆசை தீர வாங்கினோம். முழம் பத்து ரூபாய். சில இடங்களில் அதற்கும் கம்மிதான்.

கோயிலில் பூஜை செய்யும் நிறைய அர்ச்சகர்களுக்கு (சிலரைத் தவிர) ஸ்தல புராணமோ அல்லது எதாவது சிறப்பு அம்சங்களோ தெரியாமல் இருந்தது வருத்தமாகத்தான் இருந்தது. கோயிலைப் பற்றி என்ன கேள்வி கேட்டாலும் பொத்தாம் பொதுவாக "ஆயிரம் வருஷம், சோழர் காலம்" என்ற ஒரே பதில். "செய்யும் தொழிலே தெய்வம்" என்று சொல்வார்கள். தெய்வத்துக்கு அருகிலேயே இருந்து செய்யும் வேலையில் கூட ஸ்ரத்தை இல்லாமல் இருக்கிறார்களே என்று வருத்தப்பட்டோம்.

**அடுத்தபடியாக, நிறைய உள்ளடங்கிய, ஆனால் அவ்வளவு பாப்புலர் ஆகாத இடம்.**

# தேரழுந்தூர்

### பெருமாள் - தேவாதி ராஜா. தாயார் - செங்கமலவல்லி.

தேரழுந்திய ஊர் மருவி இந்தப் பெயர். பத்மா இதைப் பற்றி எங்கோ படித்திருந்ததால், சாயங்காலம் நேரம் ஆன பொழுதிலும், தொணதொணவென்று உயிரை எடுத்து இந்தக் கோயிலைத் தேடிப் பிடித்தாள். வடகலை ஐயங்கார் கோயில். விஸ்வரூப கிருஷ்ணன் சிற்பம் மிகப் பிரமாதம். சாதாரணமாக கிருஷ்ணனை குழந்தை பருவத்திலும், ஆலிலை கிருஷ்ணனாகவும் நிறைய பார்ப்போம். இது மிக வித்யாசமான ஆனந்தமான அனுபவம். கிருஷ்ணனைச் சூழ்ந்து கொண்டு நிறைய ஆடு மாடுகள். இந்தக் கோயிலைப் பற்றியும் நிறைய கதைகள் உள்ளன. எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

உபரிச்சர வாசு, ஓர் அரசன், நிறைய தவம் செய்து, பிரம்மாவிடம் தேரில் பறக்கும் சக்தியைப் பெற்றான். ஒரு முறை இந்த இடத்தின் மேலே பறந்து கொண்டிருந்தபோது, பறந்து கொண்டிருந்த தேர், தண்ணீரில் விழுந்து விட்டது. அதனால் அந்த தண்ணீர் தெறிக்கப்பட்டு, அருகில் தவம் செய்து கொண்டிருந்த அகஸ்திய முனிவர்க்குத் தொந்தரவு ஆகிப் போனது. தேர் அழுந்தியதால், அந்த ஊர் "தேரழுந்தியூர்" என்று ஆனது.

இன்னொரு கதை என்னவென்றால், அந்த அரசன், முனிவர்களுக்கு எதிராக நடந்து கொண்டதால், "அவனுடைய தேர் இந்த இடத்திலேயே புதை படும்" என்று முனிவர்களால் சபிக்கப்பட்டான் என்பதாகும்.

மூன்றாவது கதை: அந்த அரசனுடைய ராணி, இந்தத் தலத்தில் இறங்கி அங்குள்ள விஷ்ணுவை சேவிக்க ஆசைப்பட்டபோது, அந்த அரசன் மறுத்தானாம். அதனால், தெய்வீகமாக அந்தத் தேர் அந்த இடத்திலேயே அழுத்தி வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

எங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்த ஒரு ஜெர்மன் நாட்டு இளைஞர் சொன்னதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. அவரிடம் நாங்கள் கேட்டோம், “எதற்காக இந்தியாவிற்கு வருகை தருவதற்கு ஆவலாக இருக்கிறீர்கள்?” என்று. அதற்கு அவர் சொன்னார், “எங்கள் நாட்டில் வரலாறு என்பது அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் இங்கோ அதற்கு நேர்மாறு. உங்கள் நாட்டில் ஒவ்வொரு கல்லிற்கும் பத்து கதைகள் சொல்கிறீர்கள். அவைகளைக் கேட்பதற்கே நன்றாக இருக்கிறது”.

கதைகள் சிலவற்றைக் கேட்டால், “இப்படி எல்லாம் மக்கள் இங்கு வாழ்ந்திருப்பார்களா!” என்று வியக்க வைக்கும். அவர்கள் கடவுளாக இல்லாமல், ‘நல்ல சமாரிடன்களாக’ இருந்திருப்பார்களோ?

இன்னொரு பக்கம், மகாபாரதம் படித்தால், அதிலுள்ள சண்டை, வன்முறை, சூது, வஞ்சகம் ஆகியவை உண்மை, வெறும் கற்பனை அல்ல என்றேத் தோன்றுகிறது.

அவைகள் கற்பனையாகவே இருந்தால், அதன் ஸ்ருஷ்டிகர்த்தாவிற்கு, இப்படிக் கற்பனை செய்ததற்கும், அதைக் காலம் காலமாக நம் தேசத்தின் கதையாக சேர்த்தமைக்காகவும் கோடி நமஸ்காரம்.

நல்ல இருட்டாகி விட்டிருந்தது. எங்கள் வாகன ஓட்டுநர் எங்களைத் திடீரென்று ஒரு நிமிடம் மேலே பார்க்கச் சொன்னார். **"பட்டுக்கரு நீலப் புடவை பதித்த நல் வைரம்"** என்ற பாரதியாரின் வரிகள் உயிர்பெற்றது போல் அந்த வானம் ஜொலித்தது. நகரங்களில் உள்ள 'லைட் பொல்யூஷனால்' இதை நாம் அங்கே காண முடிவதில்லை. பாரதியாருக்குத் தெரியாத விஷயங்களே கிடையாது போலும். நமக்கு உண்மையிலே சுதந்திரம் வரும் என்று தெரிந்துதான், "ஆடுவோமே, பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" என்றவாறு எழுதி விட்டாரே, DK பட்டம்மாள், அதை சுதந்திரம் கிடைத்த அன்று பாடுவதற்கு சௌகரியமாக!

அந்தக் காலத்தில் பட்டுப் புடவை எடுக்க சென்றால், நல்ல கருநீல

பட்டுப் புடவையில் ஜரிகை சேலையை விரும்புவார்களாம்!

**அடுத்தது தடுக்கி விழுந்தால் கோயில் இருக்கிற <u>ஊர்</u>!**

# கும்பேஸ்வரர்

**ஸ்வாமி - ஆதி கும்பேஸ்வரர்.**
**அம்பாள் - மங்களாம்பிகை.**

கும்பகோணம் ஊர் பெயருக்குக் காரணமான கோயில். பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை கும்பகோணத்தில் இருக்கும் மகாமக குளத்திற்கு மவுசு வரும். இதைத் தென்னகத்தின் 'கும்பமேளா' என்றழைக்கலாம். மகாமக குளத்தில் நிறைய கிணறுகள் உள்ளன. ஒவ்வொரு கிணற்றுக்கும் பின்னால் ஒரு கதை, நம்பிக்கை. எல்லா புண்ணிய நதிகளும் இங்கு ஒன்று சேர்கின்றன என்று நம்புகிறார்கள். ஒரு காலத்தில் உண்மையாக இருந்திருக்குமோ என்னவோ, இப்போதெல்லாம், இந்தக் குளத்தில் மகாமக சமயத்தில் இருப்பது

லாரியில் கொண்டு வந்து கொட்டப்படும் மெட்ரோ வாட்டர்தான்.

‘சண்டே’ காலை; இன்னும் அவ்வளவாக ஊர்
விழித்துக் கொள்ளவில்லை. சோம்பல் முறித்து எழலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்ததோ என்னவோ! ஆரவாரம் இல்லாத தெருக்களில் நடப்பதும் ஒரு சின்னக் குஷி. இதுவா அவ்வளவு அமர்க்களத்துடன் நேற்று இருந்தது? இன்றோ ஆடி அடங்கி ஓய்வெடுப்பது போன்ற தோற்றம். ஒரு நல்ல ‘பிரேக்ஃபாஸ்ட்’ எங்குக் கிடைக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, அங்கே இரண்டு பேர் நல்ல அரட்டையில் இருந்ததைக் கண்டு, “சரியானவர்கள்” என்று யூகித்து விசாரித்தோம். அவர்கள் நேராக மங்களாம்பிகைக் கோயிலுக்கு வழி சொன்னார்கள். இது என்னடா என்று யோசித்தபோது, “முதலில் அம்பாளைப் பார்த்துவிட்டு, பின் கோயிலில் இருக்கும் அதே பெயரில் நடக்கும் ஓட்டலுக்குப் போகுமாறு” சொன்னார்கள். “மங்களாம்பிகை

கஃபே” கோயில் வளாகத்திற்குள்ளேயே கனஜோராக நடக்கிறது. டிஃபன், சாப்பாடு (குறிப்பாக ரசம்) பிரமாதம். ஏனைய ஹோட்டல்களில் வெங்கடரமணா, ஆடுதுறை சீதாராம் ஆகியவைகளில் எப்பொழுதுமே ஏக கூட்டம், நல்ல சாப்பாடு கிடைப்பதினால்.

நம் நெடுஞ்சாலைகளில் உள்ள எல்லா நாயர் டீ கடைகளும் “கும்பகோணம் டிகிரி காபி” கடைகளாக மாறிவிட்டன. வெறும் பெயரில்தான் இந்த மாற்றம் என்பது வேறு விஷயம். ஆனால், கும்பகோணத்தில் நல்ல டிகிரி காபி கிடைப்பதில்லை என்பது பெரிய ஏமாற்றம்! தற்போது கும்பகோணம் டிகிரி காபிகளும் ஆலடிப்பட்டியான் மற்றும் chai கடைகளாக மாறி விட்டன.

கும்பகோணத்தில் பெரிய கடைத் தெருவில் ஒரு பட்டு ஜவுளி வியாபாரக் கடை ஒன்று உள்ளது. அநேகர் வருகை தருகிறார்கள். தரையில் மெத்தை போட்டு, அதில் உட்கார்ந்துகொண்டு துணிமணிகள் வாங்கலாம். விலை அதிகம்தான், ஆனால் தரமான பொருள்

என்று நிறைய பேர் கூறுகிறார்கள். வெறுமனே பார்த்துவிட்டு ஒன்றுமே வாங்காமல் சாமர்த்தியமாகத் தப்பித்த மிகச் சில சமயங்களில் இதுவும் ஒன்று! பாத்திரக் கடைகளும் இங்கு மிக அதிகம்.

கடைத்தெருவில் பத்மாவைப் பார்ப்பது ஒரு தனியான அனுபவம்... அது எப்படி அலுக்காமல், சலிக்காமல், ஒவ்வொரு கடையிலும் ‘FOMO’ ஒரு பக்கம்... சட்டென்று ஒரு பெரிய ‘லிஸ்ட்’ நொடிப் பொழுதில் ரெடி... “அவங்களுக்கு அது, இவங்களுக்கு இது” என்று, என் ஆபீசில் வேலை பார்ப்பவர்களுக்கு முதற்கொண்டு ஏதேதோ!

மற்றபடி, வேண்டாத / பிடிக்காத / கடை இல்லாத இடங்களில் நடந்தால் புலம்ப ஆரம்பிப்பவள், கடை என்றால் எவ்வளவு நடந்தாலும் கால் வலிப்பதே இல்லை... இதுவும் ஒரு தமாஷ்தான்! எந்த ஊர் சென்றாலும் ஒரு ‘லிஸ்ட்’ கண்டிப்பாக இருக்கும்... சிங்கப்பூர் ஆனாலும் சரி, மாயவரம் ஆனாலும் சரி._

ஸ்ரீரங்கத்தில் தோசைக்கல், கல் சட்டி; மதுரையில் காட்டன் புடவை;

கேரளாவில் வெண்கல ஆப்பச் சட்டி; ஹைதராபாத்தில் கண்ணாடி வளையல், பிரியாணி; பாம்பே ஹல்வா, சிக்கி, துணிமணி - எங்கே போனாலும்... இது தவிர ஏதாவது நல்லதா இருந்தா... அப்பப்பா!

யார் யாருக்கு என்னென்ன தேவைகளோ, அது அவர்களுக்கேத் தெரியாத போதிலும், பத்மாவுக்கு மட்டும் தெரிந்து விடுமாக்கும்!

எனக்கோ எல்லா ஊர்களிலும் அந்தந்த ஊர் speciality சாப்பிடுகிற சமாச்சாரம் என்றால் ரொம்பப் பிடிக்கும்! இதனால் எனக்கு எந்த ஊருக்குச் சென்றாலும், சாப்பாட்டினால் homesick ஆவதேயில்லை. உதாரணமாக, மல்லேஸ்வரத்தில் ஹொாலிகே மனே "போளி", மதுரையில் பிரேமா விலாஸ் "அல்வா", திருவானைக்காவல் பார்த்தசாரதி ஹோட்டல் "சூப்பர்", பம்பாய் ஸ்டேட்டஸ் "கிச்சடி" மற்றும் தாகூர் பவன் "சாப்பாடு", இந்தியா காபி ஹவுஸ் "கடப்பா இட்லி", கூரக்கடை "பால் கோவா", கொடைக்கானல் தவா "பிண்டி fry",

மதுரை விசாலம் “காபி”, தஞ்சாவூரில் செல்லம்மாள் “மண்பானை சமையல்”, மஹாபலேஸ்வர் “ஸ்ட்ராவ்பெர்ரி க்ரீம்”, புனேயில் பெடெக்கெற்‘ஸ் “மிசல் பாவ்” என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

**அடுத்ததாக தந்தைக்கே மகன் உபதேசித்த இடம்.**

# சுவாமிமலை

**சுவாமிநாதசுவாமி.**

ஆறுபடை வீடுகளில் ஒன்று. முருகன் குரு ஸ்தானத்தில் இருந்து சிவனுக்கு ‘ஓம்’ என்கிற பிரணவ மந்திரம் உபதேசம் செய்வதினால், முருகனின் சன்னதி மேலே; ஸ்வாமி மற்றும் அம்பாள் சன்னதி கீழே. அதனாலேயே, ”சிவனுக்கு வாத்தியார்” என்கிற அர்த்தத்தில், சுவாமிநாதசுவாமி என்று பெயர். இங்கு முருகனின் வாகனம் யானை, மயில் அல்ல.

பத்மாவுக்கு எங்கோ படித்தது ஞாபகம் வந்திருந்து குருக்களிடம் கேட்டாள் “சிவனின் இடுப்பில் அமர்ந்து முருகன் சிவனின் காதில் உபதேசம் செய்வதாகச்

சிற்பம் எங்கிருக்கிறது?” என்று. குருக்களும் வெளியே படி இறங்கும் இடத்தில் இருப்பதாகக் கூறினார். சென்று பார்த்தோம். மிகவும் அழகான சிற்பம். வெறும் மூலஸ்தானத்தை மட்டும் பார்த்துவிட்டு வராமல், இதையும் கண்டிப்பாகப் பாருங்கள்.

> இதற்கு மேல் சுவாமிமலையில் படி ஏறி கோயிலுக்குச் செல்வது exercise என்பது கூடுதல் போனஸ்.

கீழே இருக்கும் புகைப்படத்தைப் பாருங்கள். முருகன் தன் தந்தையின் மடியில் உட்கார்ந்து கொண்டிருந்தாலும், ஒரு “கெத்தோடு” இருப்பதாகத் தோணவில்லை?



படம் 16:  swamimalai

**அடுத்து வருவது, ஒரு big surprise find....**

# திருப்புள்ளமங்கை

## ஸ்வாமி - பிரம்மபுரீஸ்வரர். அம்பாள் - அல்லியங்கோதை அம்மை.

இந்தக் கோயிலைப் பற்றி நிறைய பேருக்குத் தெரிந்திருக்கவில்லை. பத்மாவின் உந்துதலால், இந்தக் கோயிலை நீண்ட சிரமத்திற்குப் பிறகும், டாக்ஸி டிரைவரின் அலுப்புக்கு இடையிலும் எப்படியோ கண்டுபிடித்தோம். பத்மா ஒருமுறை

‘டாக்டர் சித்ரா மாதவன்’ என்கிற பிரபல வரலாற்றாசிரியர் நடத்திய பயிற்சி முகாமில் கலந்துகொண்டபோது, இதைப்
பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள். திருஞானசம்பந்தர் 7 ஆம் நூற்றாண்டில் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார் என்றும் அறிகிறோம்.

“பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்தான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே.
பொந்தின்னிடைத் தேனூறிய பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி யாலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுள் கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி ஆடத்தவ மாமே.”

இந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவனைப் பற்றி “பாலைக் காய்ச்சித் தயிராக்கி அதைக் கடைந்து அதிலிருந்து வரும் வெண்ணை போன்றவர்” என்று புகழ்ந்திருக்கிறார்.

நாங்கள் சென்றபோது நடை சாத்தும் நேரம் ஆகவில்லை. ஆனாலும், கோயில் பூட்டியிருந்தது. அருகில் இருந்த வீட்டின் பெண்மணியிடம் சாவி வாங்கி, கோயில் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றோம். அந்தப் பெண்ணின் குழந்தை ஏனோ எங்களிடம் ஆசையாக வந்தது. கோயில் முகப்பில் தற்காலக் கட்டிட அமைப்பில் தோற்றமளிக்கும் ஒரு சாதாரண கோபுரம். ஆனால், சற்றுக் கடந்து பத்தடி பின்புறம் சென்றால், நாம் பல நூற்றாண்டுகள் பின் சென்றது போல் தோன்றும் ஒரு பிரமிக்க வைக்கும் சோழர் கால வடிவமைப்பு! நம் கண்களை நம்மாலேயே நம்ப முடியவில்லை! வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத சோழர் காலத்து கற்கோயில். சில சிற்பங்கள் நம் கைப்பேசி அளவே இருந்தபோதிலும், அதன் நுணுக்கமும்

வேலைப்பாடும் பிரமிப்பூட்டுபவையாக இருந்தன! இதுவே வேறு ஒரு வெளிநாட்டில் இருந்திருந்தால், இந்த வேலைப்பாட்டினை எவ்வளவு ரசித்து, சீருடனும் சிறப்புடனும் கொண்டாடி இருப்பார்கள்? நாமோ, இதையெல்லாம் தெரிந்துகொள்ள ஆர்வமே இல்லாமல் இருக்கிறோமே?

இங்கு நாங்கள் பார்த்தது கல்லில் செதுக்கிய கவிதைகள். இதுவும் ஒரு விதமான வழிபாடுதான். தான் செய்யும் தொழிலைத் தெய்வமாக எண்ணி, தனது முழு உழைப்பையும், ஆற்றலையும் கொண்டு செதுக்கிய இச்சிற்பியும் ஒரு யோகிக்குச் சமமானவன் அல்லவா? அந்தச் சிற்பியின் பிரார்த்தனை சிற்பங்களாக உருவெடுத்திருக்கிறது. இதுபோன்ற கலைப் பொக்கிஷங்கள் இன்னும் எவ்வளவோ, எங்கோ, யாருக்கும் தெரியாமல், சரியான பராமரிப்பும் இல்லாமல் இருக்கின்றனவோ?

ஒரு comparison க்காக, என்னுடைய மொபைல் போனை ஒரு சிற்பத்தின்

பக்கத்தில் வைத்து போட்டோ எடுத்தேன்:



படம் 17: Pullamangai1



படம் 18:  Pullamangai2




படம் 19: pulla

அந்தக் கோயிலைப் பராமரிக்கும் பெண்ணுக்கு அதனுடைய அருமையோ, முக்கியத்துவமோ தெரியாமலே இருந்தது ஒரு முரண்பாடாகத் தோன்றியது. ஒருவேளை, அதுவும் நல்லதற்கோ என்றும் தோன்றுகிறது. அதனைப் பற்றித் தெரிந்துகொண்டால், பழனியின் மூல விக்ரஹத்தைச் சுரண்டியது போல, கும்பகோணம் கோயில்களில் இருந்த வெண்கலச் சிற்பங்களைக் களவாடியதைப் போல, இதுவும் நாளடைவில் காணாமல் போயிருக்கலாம்.

பராமரிக்கும் பெண்ணின் குழந்தை:



படம் 20:  Pullamangai3

இந்தப் பயணத்தின் கண்டுபிடிப்பு என்று இந்தப் புள்ளமங்கை கோயிலைச் சொல்லலாம். வரலாறு பிரியர்களே, don’t miss!



படம் 21:  Pullamangai

**என்ன ஆனாலும் நம்முடைய சொந்த ஊருக்கு ஈடு இணை உண்டோ? அடுத்து அங்கு வாசம் செய்கின்ற எங்கள் குல தெய்வத்தைப் பார்க்கலாம்.**

# மதுரைவீரன்

### ஸ்வாமி - மதுரைவீரன். துணைவியர்கள் - பொம்மி & வெள்ளையம்மாள்

தஞ்சாவூரில் உள்ள அய்யம்பேட்டை கீழ வழுத்தூர் என் தந்தை பிறந்த ஊர். கீழ என்று இங்கு சொல்வது கிழக்கைக் குறிக்கிறது. மேற்கு பக்கம் இருக்கும் வழுத்தூரை மேல வழுத்தூர் என்று சொல்கிறார்கள். ‘தில்லு முல்லு’ சினிமாவில் வரும் “அய்யம்பேட்டை அறிவுடை நம்பி கலியபெருமாள் சந்திரன்” என்கிற கேரக்டர் ஞாபகத்திற்கு வருகிறதா? எனிஹௌ எனக்குத் தனி ஈர்ப்பு.

நாங்கள் குலதெய்வமாக வழிபடும் “மதுரைவீரன்”, மனிதராகப் பிறந்து, தான் செய்த நல்ல செய்கைகளினாலே,

கடவுளாக வழிபடப்பட்டாரோ என்று தோன்றுகிறது. இவர், சங்கிலிக்கருப்பன், அய்யனார் ஆகியோர் எல்லோருமே இதே மாதிரி தெய்வங்கள்தான். கிரேக்க சமூகத்தில் ஹெர்குலஸ், அகிலஸ் போன்றவர்களை போல - demi gods!

ஒருவர் தஞ்சாவூர்க்காரரா இல்லையா என்பதை எளிதில் கண்டுபிடித்து விடலாம். அறுபது, எழுபது என்று வரிசையாகச் சொல்லச் சொல்லுங்கள். அடுத்த வார்த்தையை எண்பது என்று சொல்லாமல் **எம்பளது** என்று சொன்னால், அவர் தஞ்சாவூரைச் சேர்ந்தவர்தான் என்பதில் சந்தேகமே இல்லை! ☺




படம் 22: Maduraiveeran

காவிரியில் இருந்து பிரிந்து வரும் குடமுருட்டி ஆற்றிலிருந்து சுமார் நூறு

மீட்டர் அருகில் என் தந்தையார் பிறந்து வாழ்ந்த வீடு. அந்த வீட்டை ஓர் இஸ்லாமியக் குடும்பம் வாங்கி இப்போது வசித்து வருகிறார்கள். நாங்கள் அங்கு செல்லும்போதெல்லாம் வந்து அன்போடு விசாரிப்பார்கள். ஆனாலும், அந்தத் தெருவில் ஓர் இறுக்கமான சூழ்நிலை நிலவுகிறது. ஒரு சமூகவியல் ஆராய்ச்சிக்கு உகந்தது, இந்த இடமும் அங்கு நிலவும் பனிப்போரும். அந்தத் தெருவிற்கு இரண்டு பெயர்கள்; ஓர் இந்துப் பெயர், ஓர் இஸ்லாமியப் பெயர். ஒரு குழந்தைக்கு இரு வீட்டார் பெயர் வைப்பது போல! பெரும்பான்மையான இந்துக்களின் கருத்து என்னவென்றால், எல்லாவற்றையும் இஸ்லாமியர்கள் ஆக்கிரமித்து விட்டார்கள்; எங்கள் ஊர் எங்களை விட்டுச் சென்றுவிட்டது என்பது. நாம் கிராமங்களை விட்டு நகரங்களுக்குக் குடிபெயர்ந்துவிட்ட பின், அங்குள்ள சூழ்நிலையை விவாதிப்பது வெறும் வெட்டிப் பேச்சு. Brain drain என்பது வெளிநாடுகளுக்குச் செல்வது மட்டும் அல்ல;

### என் தந்தையார் வசித்த தெரு:



படம் 23:  VillStreet

## என் தந்தையாரின் கிராமம் இப்பொழுது:



படம் 24:  Vill

internal migration is also a brain drain and is a dampener on the development of our villages - I guess it's a cycle.

**இந்த மனிதர் இன்னும் இங்கேயே இருந்து கொண்டு வேலை செய்கிறார்:**



படம் 25: OldMan

மற்றும் ஒரு வேதனையான விஷயம் என்னவென்றால், எதோ இந்துக்களின் நாடாக இது இருந்தது போலவும், அந்நியர் ஊடுருவல் போன்ற எண்ணங்களை வீணாக வளர்த்துக்கொண்டு உள்ளார்கள். இஸ்லாமியர்களும் தொன்றுதொட்டு இதே ஊரில் இருந்தவர்கள் என்ற

உண்மையை, வரலாறு அறியாதவர்கள், அறிந்துகொள்ள விரும்பாதவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனால், அதே அவர்கள் பிள்ளைகள் USA, UK - யில் இருப்பதை மட்டும் பெருமையாக ஊருக்கேப் பறைசாற்றுவார்கள். அது ஊடுருவலில் சேராது அல்லவா? இவ்வாறு, இந்துக்களும் இஸ்லாமியர்களும் அடுத்தடுத்து வாழும் தெருக்களில், ஒளிவுமறைவாக நட்பும் காதலும் இல்லாமலா போகும்? இயற்கைக்குப் புறம்பாக எதையாவது அழுத்தி வைத்தால், அது ஒரு நாள் வெடிக்காமலா போகும்? “மனிதன் மாறிவிட்டான், மதத்தில் ஏறிவிட்டான்” என்ற சினிமாப் பாட்டு வரிகள் ஏனோ நினைவில் வந்தன!

As a side note.

இஸ்லாமியர்கள் சுமார் ஏழாம் நூற்றாண்டில் வியாபாரத்தில் இந்தியாவுடன் ஈடுபட்டிருந்தினர். அவர்கள் தங்களுடைய மதத்தைத் திணித்ததற்கானச்

சான்றுகள் அவ்வளவாக இல்லை என்று நாம் அறிகிறோம். எனவே, இந்நாடு அவர்களுக்கும் நமக்கும் சொந்த நாடாகத்தான் இருந்திருக்கிறது. எங்களது பள்ளி மற்றும் கல்லூரி காலங்களில் பொதுவாக அனைத்து மதத்தினருடன் ஒன்றாக எந்த வித வேறுபாடும் இன்றி சந்தோஷமாக இருந்து வந்தோம். இப்பொழுது இருக்கும் சூழலில் வேறு மதத்தைச் சார்ந்தவர்களுக்கு வீடு வாடகைக்கு கிடைப்பது சுலபமாக இல்லை, மேலும், சில கல்வி நிறுவனங்கள் மற்றும் வீட்டு சொசைட்டிகள் சில சமூகத்தினரைச் சேர்த்துக் கொள்வதில்லை; அப்படியே இருந்தாலும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களின் சமூக மற்றும் சில விஷயங்களில் சரியான புரிதல்
இல்லாமல் இருப்பது கவலைக்குரியதாக இருக்கிறது. முன்னூறு வருடங்கள் ஆங்கிலேயத் தாக்கத்தினால், நமது கலாச்சாரம், மொழி போன்றவைகளில் பலவிதமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆங்கிலேயர் விட்டுச்

சென்ற மொழியினைப் பேசுவதிலும், அவர்களைப் போல் உடுத்துவதிலும் இன்னும் பெருமை கொள்ளும் நாம், இஸ்லாமிய தாக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் வேறாக பார்க்கிறோம். நம்மை பிரெஞ்சுகாரர்கள் மற்றும் போர்த்துகீஸ்காரர்கள்
ஆண்ட இடங்களில் அவர்களின் தாக்கத்தைப் பார்க்கிறோம்.இன்றைய திருமணங்களில் கண்டிப்பாக ரூ. 30,000 க்குக் குறையாத “ஒரு நாள் மட்டுமே” பயன்படும் “லெஹங்கா”; ரிசப்ஷன் சாப்பாட்டில் “பன்னீர் பட்டர் மசாலா” மற்றும் “பான்”, சடங்குளில் “மெஹந்தி” “ஹல்தி” மற்றும் “சங்கீத்” என்ற வட நாட்டு சங்கதிகள் எல்லாம் இடம் பெறுகின்றன. நாம் அன்றாடம் பேசும் மொழியிலும், பாட்டு நடனம் இலக்கியம் போன்றவைகளிலும் நாம் அதிகம் விரும்பும் உணவு பொருட்களான சமோசா, பிரியாணி, குலாப் ஜாமுன் போன்றவைகளில் தாக்கம் இல்லாமல் இருக்க வாய்ப்பு இல்லை. இவை இஸ்லாமிய உலகம் நமக்கு அளித்த அன்பளிப்புகள்.

ஹிந்துக்கள் முந்தைய காலங்களில் தையல் செய்யாத அங்கிகளை அணிந்திருந்தார்கள், புடவை, வேஷ்டி, அங்கவஸ்திரம் இத்யாதி. தையல் கலையை இங்கு கொண்டு வந்த பெருமை இஸ்லாமியர்களையேச் சாரும் என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். மேலும், வாலாஜாஹ் நவாப் தனது ஆட்சிக் காலத்தில், கபாலீஸ்வரர் கோயில் குளத்திற்கான இடத்தையும், ஸ்ரீரங்கத்தில் நவாப் தோட்டம் என்று நந்தவனத்திற்கான இடத்தையும் அளித்ததாகவும் தகவல் அறிகிறோம். ஒரு நவாப் தன்னுடைய நாணயங்களில் ஒரு பக்கம் தன்னுடைய முத்திரையையும், மறுபக்கம் இந்துக் கடவுள்களின் உருவங்களையும் பதித்து இருந்தார் என்றும் பார்க்கிறோம். எனவே, ஒன்றாக வாழ்ந்து வந்ததில் எல்லோரும் செழித்தனர் என்பதில் ஐயம் இல்லை; என்ற போதும், இன்று சண்டையையும் பூசலையும் உண்டு பண்ணி, பிளவுகளைப் பெரிதுபடுத்த நம்மில் பலர் அச்சப்படுவதில்லை. எதோ இவர்கள்தான் இந்து மதத்தின்

காப்பாளர்கள் போல - யாருடைய தயவும், மேல் பார்வையும் இல்லாமல் இந்த மதம் இத்தனை வருடங்களாக இருந்திருக்கிறது
என்பது நிஜம் அல்லவா? சற்றே சிந்தித்தார்கள் என்றால் புரிய மனம் கொண்டவர்களுக்கு இது புரிய வாய்ப்பு இருக்கிறது!

எனது அம்மா, தனக்குத் திருமணமான புதிதில், வீட்டிலிருந்து தினமும் காவிரிக் கரைக்குச் சென்று, துணி துவைத்து, பிறகு தண்ணீர்க் குடம் சுமந்துகொண்டு வீட்டுக்கு வருவது பற்றி எங்களிடம் நிறையச் சொல்லியிருக்கிறார். வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் நடந்திருப்பார்கள் என்று நினைத்தபோது, அந்தக் காலகட்டத்தின் வாழ்க்கை நிலையை நினைக்காமல் இருக்க முடியவில்லை. அதிலிருந்து எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்,
ஒரே தலைமுறையில் என்றும் நினைக்கத் தோன்றுகிறது. நிறைய முன்னேறிவிட்டோம்: வாழும் சூழ்நிலை, சௌகரியங்கள், படிப்பு, ஆரோக்கியம்,

தொழில்நுட்பம், நீண்ட ஆயுள் ஆகிய எல்லாவற்றிலும். என்ன, இந்த முன்னேற்றமெல்லாம் சமூகத்திலுள்ள எல்லோரையும் அடையவில்லை என்பதும் வருந்தத்தக்கது. இந்தக் காலத்தின் பாதிப்பு இல்லாமல் சிலர் இருக்கிறார்கள் என்பது ஆச்சரியம்! உதாரணம், எங்கள் வழுத்தூர் வீட்டிற்கு அருகில் ‘பாப்பா’ என்கிற பெண்மணி. பாப்பாவிற்கு உறவினர்கள் சென்னையிலும், பெங்களூரிலும் இருக்கிறார்கள். ஆனாலும், அவர் இங்கே தனித்தே இருக்கிறார். அவர்தான் எங்களை ஒரு “கைட்” போல அருகில் உள்ள எங்கள் குலதெய்வமான மதுரைவீரன் கோயிலுக்கு அழைத்துச் சென்றார் - எதையும் எதிர்பார்க்காமல், தனது கடமையைப் போல. அவசரமான நகர வாழ்க்கை நம்மை ரொம்பவும் selfish ஆக மாற்றிவிட்டதோ? இதுபோன்ற சிறிய உதவிகளைக் கூட மற்றவர்களுக்காகச் செய்வோமா, எதற்கும் நேரமில்லாமல்?

Ernest Hemingway கூறுவது போல...
The city folks always have a steamer to catch.

எளிமையான வாழ்க்கை; இருப்பதை ஏற்றுக்கொண்டு, எதிர்பார்ப்புகள் நிறைய இல்லாமல் இருக்கும் பாப்பா போன்றவர்கள் ஒரு பக்கம்; காசு, வசதி, பதவி என எல்லாம் இருந்தும் நிம்மதி இல்லாமல் எதையோ தேடிக்கொண்டிருக்கும் சிலர் - இந்த ஓட்டத்தில் நாம் எங்கிருக்கிறோம் என்ற கேள்வி எழுகிறது!

எனது தந்தையின் குடும்பம் சுத்த சைவம். மதுரைவீரனுக்கோ ஆடும், சாராயமும்தான் படையல். எப்படி மதுரைவீரன் எங்களது குலதெய்வம் ஆனார் என்பது சிறு வயதில் எனக்குச் சற்றே புரியாத புதிர். பிறகுதான் தெரிந்தது, அந்தக் கிராமத்தில் இருக்கும் அனைவருக்கும், பாகுபாடு இன்றி, மதுரைவீரன்தான் குலதெய்வம் என்று. மீனாட்சிதான் பிரதான தெய்வம். சங்கிலிக் கருப்பன், மதுரைவீரன் ஏனையோர் காவல் தெய்வம். இந்தக்

குலதெய்வ விஷயத்தில் சில நல்ல விஷயங்கள் உண்டு. ஒரு கிராமத்தில் இருக்கும் அநேகருக்கு, அவர்களின் ஜாதி வித்தியாசங்கள் இல்லாமல், குலதெய்வம் ஒன்றே ஆக இருக்கிறது என்றே தோன்றுகிறது. குலதெய்வக் கதைகளும் நம்பகத்தகுந்த வகையிலே உள்ளன. அந்த ஊரில் திருட்டு, கொள்ளை ஆகியவை நடைபெறாமல் காத்துக்கொள்வதற்காக, காக்கும் கடவுள் ஊருக்கு எல்லையில் இருக்கிறார். ஆனால், சில சமயங்களில் குலதெய்வப் பெயரைச் சொல்லிப் பயமுறுத்துகிறார்கள். “குலதெய்வத்திற்கு ஏதாவது செய்யாமல் இருந்தால், ஏதேனும் கெட்டது நடக்கும்; அல்லது, இந்தக் கெட்டது நடந்ததற்குக் காரணமே, குலதெய்வத்தை உதாசீனப்படுத்தியதால்தான்” என்றெல்லாம். சில கோயில்களின் அருகே

நடக்கும் அமோக வியாபாரங்களைப் பார்த்தால், இதெல்லாம் ஒரு பிசினஸ் என்றே தோன்றுகிறது. ‘பூச்சாண்டி’ காட்டி நம்முள் பயத்தை கிளப்பி விட்டு,

அதில் குளிர் காயப் பார்க்கிறார்கள். இன்னும் சில ஜோசியக் காரர்களோ, மக்களை குலதெய்வம் hopping செய்ய வைக்கிறார்கள்.

நம்முடைய மூதாதையர்கள் ஊர் மற்றும் அவர்கள் நடந்து வந்த பாதைகளைப் பார்ப்பதிலும் ஒருவிதமான ஆவல் கலந்த ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. என் அம்மா நிறைய ஊர்க் கதைகளைப் பத்மாவிடம் சொல்லக் கேட்டிருக்கிறேன். மாற்று உலக்கையில் பொன்னா சித்தியுடன் சேர்ந்து ‘சின்க்ரோனைஸ்ட்’ ஆக நெல் இடித்ததும், ஒரே நெருப்புக் குச்சியில் அடுப்புப் பத்த வைத்ததும் (மாமியாரின் கட்டுப்பாட்டில் ஒன்றான ஒரே ஒரு நெருப்புக் குச்சி), நாள் முழுவதும் அடுப்பங்கரையை விட்டு வர முடியாமல், வெளி உலகமே பார்க்காமல், எல்லாவற்றுக்கும் பயந்து, யாரோ ஒருவரைச் சார்ந்து - அது மாமனாரோ, மாமியாரோ அல்லது கணவரோ, அவருடைய அண்ணன், தம்பி என்று - ஒரு பெண்ணின் வாழ்க்கையில்

அவ்வளவு அடிமைத்தனம்! நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

அந்தக் காலகட்டத்தில் இப்போது போல் சௌகரியங்கள் கிடையாது. வாசல் தெளித்துக் கோலம் போட்டு, விறகு அடுப்பில் பெரிய கூட்டுக் குடும்பத்திற்குச் சமைத்து (நாள்-கிழமைகள், நல்லது-கெட்டது என்றால் கூடுதல் வேலை), திடீர் திடீரென்று முன்னறிவிப்பு இல்லாமல் வரும் விருந்தினர்களை உபசரித்து, மாட்டுத் தொழுவத்தைப் பார்த்துக்கொண்டு, செக்கில் எண்ணெய், வெண்ணெய் திரட்டி எடுத்து, குங்குமம், மை ஆகியவற்றையும் வீட்டிலேயே செய்து, அப்பப்பா! “வீட்டைச் சுற்றி வேலை பார்த்தால், விரலைச் சொடுக்க நேரமில்லை” என்று என் அம்மா சொல்வது நினைவுக்கு வருகிறது. இப்படி எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து, அங்குள்ள ஆண்கள் சாப்பிட்ட பிறகுதான், பெண்கள் உண்ண உட்கார முடியும். உடுத்த, உட்கார, உண்ண, ஏன், தன் கணவருடன் பேசுவதற்கும்

கட்டுப்பாடு. மாமியார் கொடுமை. எப்படி ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணுக்கு எதிரியாக இருந்தார்கள் - மாமியார் - மருமகள் பிரச்சினை இன்றுவரைக்கும் நீடிக்கிறது - அது முடிவே இல்லாமல் நீடிக்கும் என்றே தோன்றுகிறது. தினத்தந்தி ‘கன்னித்தீவு’ மாதிரி!

தான் யார் என்பதே மறந்திருக்கக் கூடுமோ; பிடித்தமான உணவு, பொழுதுபோக்கு என்று தன்னைப் பற்றிய சிந்தனைகளுக்குக்கூட நேரமில்லாமல் இருக்க வேண்டிய நிலை. ஆனாலும், அந்த வட்டத்திற்குள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளப் பழக்கப்படுத்திக் கொண்டனர்.

நிறையக் கொடுமைகளைத் தாண்டி, ரொம்பத் தூரம் வந்துவிட்டது போல் ஓர் உணர்வு. நம்மால் இந்த வாழ்க்கைக்குத் திரும்ப முடியவே முடியாதோ? இப்படிப் பல யோசனைகள்! பாடகி ‘மடோனா’ மாதிரி ‘மெடீரியல் கேர்ள்’ (அல்லது ‘பாய்’) ஆகிவிட்டோமோ?

உபரியாக - ஒரு ‘ஃபிளாஷ்பேக்’.

நான் 1978-ல் 'பி.யு.சி.' முடித்தவுடன், என் தந்தையுடன் முதன்முதலாக ஒரு பெரிய 'டூர்' அடித்தது நினைவுக்கு வருகிறது. அப்போதெல்லாம் ஊருக்குப் போவது என்பது குதிரைக் கொம்புதான். அதனால்தானோ என்னவோ, இந்தப் பயணத்தைப் பற்றிய நிறைய விஷயங்கள் பசுமையாக ஞாபகத்தில் இருக்கின்றன. திருச்சியில் தொடங்கி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம் ஆகிய ஊர்களுக்குச் சென்று, நிறைய இடங்களுக்கு 'விசிட்' அடித்தோம். என் தந்தைக்குத் திருச்சி ஊர் நன்றாகத் தெரிந்திருந்தது, எனக்குப் புதிதாக இருந்தது. அப்புறம் நினைவுக்கு வந்தது, என் தந்தை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் 'பி.ஏ.' 'கெமிஸ்ட்ரி' படித்திருக்கிறார். பாதர் லீ (Father Leigh) என்கிற பேராசிரியர் கையொப்பமிட்ட பி.ஏ டிகிரி certificate பார்த்திருக்கிறேன். 1920-களில் எத்தனை பேர் 'பி.ஏ.' வரை படித்திருப்பார்கள்? அப்போதெல்லாம் 'டிகிரி' பரீட்சை ஒரு முறைதான் எழுத முடியுமாம். தேர்வில் வெற்றி பெறவில்லை என்றால்,

வெறும் ‘இன்டர்மீடியட்’தான். அதை ‘எஃப்.ஏ.’ என்று சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த டூருக்கு முக்கிய காரணமே, நிறைய வருடங்களுக்கு முன்னால் செய்த வேண்டுதல்தான். நான் கைக்குழந்தையாக இருந்தபோது, என் தந்தையை பெரியம்மைத் தாக்கியது. மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில், அதிசயிக்கத்தக்க விதத்தில் பூரண குணமாகி, பிற்காலத்தில் அதன் சுவடே இல்லாமல் மீண்டு வந்தார். அந்த சமயத்தில் செய்த அம்மாவின் வேண்டுதலை நிறைவேற்ற, என் தந்தையும் நானும் மேற்கொண்ட பயணம் அது. அதன்படி, சமயபுரத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் என் தந்தை அங்கப்பிரதட்சிணம் செய்தார். நான் அவருக்கு உதவியாகப் பின்னாலேயேச் சென்றேன். அப்போது, சென்னை ‘டு’ திருச்சினாப்பள்ளி செல்ல ரயில் டிக்கெட் விலை ரூ.16. மாணவர் சலுகையுடன் ரூ.8. புகைவண்டி எஞ்சின்! இறங்கும்போது, புகைவண்டி கக்கும் கரியினால்

போட்டிருக்கும் துணிகள் எல்லாம் கரி படிந்து பழுப்பாக மாறியிருந்தன.

அந்த டூர் இன் போது, திருச்சிக்குப் பிறகு, தஞ்சாவூர், கும்பகோணம், திருநாகேஸ்வரம், மாயவரம் அருகில் இளந்தோப்பு மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் சொந்தக்காரர்கள் வீட்டில் இரண்டு இரண்டு நாட்கள் தங்கி என்ஜாய் பண்ணினது இன்னமும் பசுமையாக நினைவில் இருக்கிறது.

இன்னும் எங்கள் பயணம் தொடர்கிறது ...

**அடுத்ததாக ...பெண்களைப் பிரதானமாக வைக்கும் கோயில்.**

# நாச்சியார் கோயில்

**தாயார் - வஞ்சுளவல்லி நாச்சியார்.**
**பெருமாள் - நறையூர் நம்பி.**

இந்தக் கோயிலில் தாயார் பெயர் முதலில், அப்புறம்தான் பெருமாள் பெயர்!

திருமங்கை ஆழ்வாருக்கு விஷ்ணுவால் ‘பஞ்ச ஸம்ஸ்காரம்’ எனப்படும் மதத்

துவக்கம் செய்வித்த இடம். இங்கிருக்கும் கல் கருடர், வெளியில் எடுத்துச் செல்லும்போது அதனுடைய எடை பல மடங்கு கூடும் என்பது நம்பிக்கை. இன்னொரு தென்கலை ஐயங்கார் கோயில், ஆகவே நிறைய தமிழ் மணம். நாங்கள் சென்ற பொழுது நடை சாத்தும் நேரம் ஆகிவிட்டது. நாங்கள் வெகு தொலைவிலிருந்து வருகிறோம் என்பதை எப்படியோ உணர்ந்த பட்டாச்சார்யார், எங்களை அழைத்துப் பெருமாள் தரிசனம் காண வைத்தார். இங்கும் அவர் ஸ்தல புராணம் சொல்லி எங்களை மகிழ்வித்தார். கருடரை முதலில் நால்வர்தான் தூக்கி வருவார்கள். வெளியே வர வர, எப்படி நால்வர் தூக்கி வரும் கருடரைத் தூக்குவதற்கு, முறையே 8, 16, 32, 64, 128 பேர் தேவைப்படுகிறார்கள் என்று நாம் முன்பே கேள்விப்பட்டிருந்ததை மிக அழகாக விளக்கிச் சொன்னார். திரும்பவும் சன்னதிக்கு வரும்போது, ஆட்கள் குறைந்துகொண்டே வருவார்கள். மீண்டும் சன்னதிக்குள் செல்கையில், வெறும் நான்கு

பேர்தான் தேவைப்படுவார்களாம். எப்படி சாத்தியம் என்று புரியவில்லை. ஆனால், கேட்பதற்கு ஆச்சரியமாக இருக்கிறது!

கலியுகத்தில் ஆண்கள் பெண்களின் பேச்சை நிறையக் கேட்பார்கள் என்று 'மகாவிஷ்ணு' நினைத்தாராம். அதற்கு உதாரணமாகத்தான் இங்கு பெருமாள், தாயாரின் பேச்சைக் கேட்கிறாராம். உற்சவங்களின்போது நாச்சியாருக்குத்தான் இங்கு முதல் மரியாதை, சாப்பாடு முதற்கொண்டு எல்லாவற்றிலும். ஸ்ரீனிவாசர் தாயாரைப் பின்பற்றுவதோடு சரி. சன்னதியிலும் கூட, நாச்சியாருக்குத்தான் முக்கியத்துவம். விஷ்ணுவின் சன்னதி சற்றே ஓரத்தில்தான். மகாவிஷ்ணு ஓர் உதாரணப் புருஷனாக இருக்கலாம்!

"மகாவிஷ்ணுவே நேரில் வந்து
சொன்னால்கூட,
நாங்கள் அவ்வளவு சுலபமாக
மாறிவிடுவோமா என்ன!"

என்று நம் ஆண் மகன்கள் கூறுவது காதில் கேட்காமல் இல்லை. ☺

நாச்சியார் கோயிலில் வெண்கலப் பாத்திரங்கள், குறிப்பாக, வெண்கலக் குத்துவிளக்குகள் மிகவும் பிரபலம். பெண்களின் திருமண சமயத்தில் இங்கே குத்துவிளக்கு வாங்குவது விசேஷம் என்று கருதப்படுகிறது. புகுந்த வீட்டில் புது மணப்பெண்ணை நன்றாக நடத்துவார்கள் என்ற நம்பிக்கைதான். அந்த விளக்கு மாதிரி நிமிர்ந்து நிற்க, அந்தப் புது மணப்பெண்ணுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்களோ என்னவோ? ஆளுயரக் குத்துவிளக்கு, சுமார் இருபது கிலோகிராம் எடையுள்ளது, பத்மாவும் விடாப்பிடியாக "இருபத்தைந்து வருட ஆசை" என்று ஒரே போடு போட்டு ஒரு விளக்கை வாங்கிவிட்டாள்! எமோஷனல் பிளாக்மெயில்! ஆனால், சும்மா சொல்லக் கூடாது - அது பார்க்க அழகாகத்தான் இருக்கிறது, எங்கள் வீட்டில். ஜோரான வேலைப்பாடு.

கும்பகோணத்தில் எதையும் வாங்காமல் தப்பித்து, அதற்கு ஈடாக இங்கு இதை வாங்கும்படி ஆனது!:



படம் 26:  nachiar

**நெக்ஸ்ட் - பெருமாளே ஒரு பக்தனுக்காக இறங்கி வந்து 'காரியம்' செய்த கோயில்.**

## சாரங்கபாணி கோயில்

**உற்சவர்- சாரங்கபாணி, மூலவர் - ஆராவமுதன். தாயார் - கோமளவல்லி**
கும்பகோணத்திற்கு உள்ளேயே இருக்கும் கோயில். பெருமாள் சன்னதி ஒரு பெரிய தேரில் அமைந்திருக்கிறது. குதிரைகளும்
யானைகளும் வேலைப்பாடு நிறைந்த கல் தேரை இழுக்கின்றன. முன்னங்கால்கள் மடித்து, அதனுடைய வால் மேல்நோக்கிய அமைப்பு, அது ஓடிக்கொண்டிருப்பது போல் தோன்றியது! சோழர் காலச் சிற்பிகளின் கைவண்ணத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.



படம் 27:  Sarangapani3

ஒரு தீவிர பக்தர், உற்றார் உறவினர் யாருமின்றி, இந்தக் கோயிலிலேயே பெருமாள் சேவை செய்துகொண்டு, ஒரு தீபாவளி அன்று இறந்துவிட்டாராம். சுற்றியிருந்தவர்கள் எல்லோரும், “இந்த நல்ல நாளில் தீட்டு படுவதா? பிறகு பார்த்துக்கொள்ளலாம்” என்று அவரவர் வேலையைக் கவனிக்க எத்தனித்தார்களாம்.

அப்போது ஆராவமுதனே, ஒரு சிறுவன் வடிவில் வந்து, அந்த இறந்த பக்தருக்கு ஈமக் கிரியை செய்தார் என்பது வரலாறு. ஆகவே, இன்றும் தீபாவளி அன்று இந்தக் கோயிலில்

தெவசம் செய்கிறார்கள். இது வேறு எந்தக் கோயிலிலும் கிடையாது என்று அறிகிறோம்.

இதன் ராஜகோபுரம் 53 மீட்டர் உயரமும், பதினோரு நிலைகளும் கொண்டது. ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு சிற்பங்கள் உள்ளன. கீழே உள்ள நிலைகளில் உள்ள சிற்பங்கள், முதன்முறையாகப் பார்ப்பவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். கஜுராஹோ, கோனார்க் போன்ற கோயில்களில் உள்ள சிற்பங்களுக்கு எந்த விதத்திலும் சோடை போகாமல் உள்ள அந்தச் சிற்பங்களின் வாயிலாக நாம் அறிந்துகொள்வது நிறைய விஷயங்கள். இதன் பயன் என்னவென்றால், ‘பாலிய விவாகம்’ நிறைய நடந்துகொண்டிருந்த காலத்தில் (உதாரணமாக, என் தாய்க்குத் திருமணம் ஆனபோது வயது பதினான்கு அல்லது பதினைந்து), வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் வீட்டில் சொல்லிக் கொடுத்திருக்க முடியுமா என்பது சந்தேகமே. ஆகவே, பாலியல் கல்வி கற்றுக் கொடுப்பது

கோயிலில்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல, எந்த உறவுமே இயற்கைக்கு அப்பாற்பட்டது அல்ல என்பதை நமக்குப் பொட்டில் அறைந்தாற்போல் உணர்த்துகிறது. புதிதாக இந்தக் கோயிலுக்கு வருகை தரும் எல்லோருமே, வெட்கத்தைப் பறைசாற்றிக் கொண்டாவது, அதைப் பார்க்காமல் போவதில்லை.

அங்கு வந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, “ஐயோ, என்ன அநியாயம்!” என்று சொல்லிக்கொண்டே, அந்தச் சிற்பங்களை வைத்த கண் வாங்காமல் நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார். “ரொம்ப அநியாயம் என்றால், கண்ணை மூடிக்கொண்டு போவதுதானே?” என்று நினைத்துக்கொண்டேன்.



படம் 28:  Sarangapani



படம் 29:  Sarangapan4

கோயிலுக்கு மிக அருகில் நல்ல ஹோட்டல் உள்ளது. பிரமாதமான

காபி மற்றும் டிஃபன் கிடைக்கிறது. அருகிலேயே ஒரு இனிப்பு, மிட்டாய்க் கடை. நல்ல தரமான இனிப்பு வகைகள், சென்னையில் கிடைப்பதை விட மிக மலிவு விலையில்.

அடுத்தது.........

**பெருமாள் தன் திருமணத்திற்காக தங்கிய கோயில்.**

# சோமேஸ்வரர் கோயில்

**ஸ்வாமி - சோமேஸ்வரர். அம்பாள் - சோமசுந்தரி.**

சாரங்கபாணி கோயிலின் உட்புறத்திலேயே உள்ளது. இந்தச் சிவன் கோயிலில் திருமணம் ஆவதற்குக் காத்திருப்பதற்காக, பெருமாள் தங்கினார் என்ற நம்பிக்கை உண்டு. அருகில் உள்ள தெருக்களில் நிறைய மாடுகள் ‘ஹாயாக’ மேய்ந்து கொண்டிருந்தன.

கோயிலுக்குப் பக்கத்திலேயே கடை வீதி. ஒரு பையன் பிரமாதமான வெற்றிலை விற்றுக் கொண்டிருந்தான். நல்ல ‘கமர்’ வெற்றிலை வாசனைக் கிறக்கத்தில்,

கொஞ்சம் வெற்றிலைச் சீவல் ஊருக்கு எடுத்துச் செல்ல வாங்கினோம்.

# சக்ரபாணி கோயில்

## பெருமாள் - சக்ரபாணி. தாயார் - விஜயவல்லி.

சிவனைப் போல் இங்குள்ள பெருமாளுக்கு நெற்றியில் மூன்றாவது கண். சுதர்சன சக்கர விஷ்ணு கோயில். அரியும் சிவனும் ஒன்று என்று உணர்த்துவதற்காகத்தான் இவ்வாறு உள்ளனவோ?

சுருட்டப்பள்ளி என்கிற இடத்தில் உள்ள கோயிலில் சிவபெருமான் ஸ்ரீரங்கத்து ரங்கநாதர் மாதிரிப் படுத்துக்கொண்டிருக்கிறார். கோயிலில் பெருமாள் கோயில் மாதிரி தீர்த்தம் தருகிறார்கள்.

இந்தச் சக்கரம்தான் பெருமாளின் மிகச் சக்திவாய்ந்த ஆயுதம் என்று கருதுகிறார்கள். பட்டாச்சார்யார் சுதர்சன மந்திரத்தைச் சொல்கிறார். கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. சாயங்காலம் கதைகள் பேசிக்கொண்டு

உட்கார்ந்திருக்க
நிறைய இடம் இருக்கிறது. ஆற அமர இளைப்பாறிவிட்டு வரலாம்.

அடுத்தது ......

**எங்காத்துக்கு திரும்பிப் போகணும்.**

## 'ஹோம் ஸ்வீட் ஹோம்'

இந்தக் குறுகிய காலச் சுற்றுப் பயணம் முடிந்து ஊர் திரும்பினோம். மீண்டும் பஸ்ஸில் பயணம். ஆனால் இந்த முறை குளிர் சாதனம் இருந்த 'பஸ்'. சௌகரியமான படுக்கை வசதி கொண்ட வாகனம்.

'ஜம்' என்று கண்ணயர்ந்து மீண்டும் விழித்துக் கொண்ட போது, சென்னை கோயம்பேடு வந்தாகி விட்டது.

இனிமேல் பிரயாணம் என்றால் இந்த மாதிரி பஸ்ஸில் அல்லது "ப்ளெஷரில்" தான் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டோம்.

'உபெர்' பிடித்து வீடு வந்து சேர்ந்தோம்.



படம் 30: hsh

நாங்கள் இருப்பதோ 'தரையும் கூரையும் நமக்கு சொந்தமில்லாத' அபார்ட்மெண்டில் தான். எங்கள் வீடு இது போல் இருந்திருக்கலாம் என்று கற்பனை செய்ததன் வினை!

# முடிவுரை

மாயவரம் மற்றும் அதற்கு அருகாமையிலும் இன்னும் நிறைய கோயில்கள் உள்ளன. ஏறக்குறைய எல்லா கோயில்களும் பழம்பெருமை வாய்ந்தவை, வரலாறு முக்கியத்துவம் உடையவை. ஆனாலும் ஒரு

சித்தர் சொல்லியது மனதிற்குள் தோன்றிக் கொண்டே இருந்தது. “கோவிலாவதேடா, குளங்களாவதேடா, கோவிலும் மனத்துள்ளே, குளங்களும் மனத்துள்ளே“. கடவுள் எங்கும் இருக்கிறார் என்றால், எதற்காக ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று வழி பட வேண்டும்?

> கபீர் கூறியதாவது, “கடவுள், மூர்த்தியில் இல்லை, தீர்த்த யாத்திரையில் இல்லை. கோயிலில் இல்லை மசூதியில் இல்லை. நமக்கு உள்ளேயே, மிக அருகாமையில் இருக்கிறார். நம்மிடமே தேடுங்கள், கடவுள் மிக எளிதாகக் கிடைப்பார்”.

நம்மில் அநேகர் கடவுளை வணங்குவது, ஒன்று சொர்கத்தை எதிர்ப்பார்த்து அல்லது நரகத்திலிருந்து தப்புவதற்கு. எதையுமே எதிர்பாராமல் கடவுள் மேலுள்ள அன்பினால் மட்டுமே வழிபடுவது என்பது எத்தனை பேரால் முடியும்? முன்னே சொன்ன சூஃபி துறவி ‘ரபீஆ அல் பாஸ்ரா’ - எதையும் எதிர்பாராமல்

கடவுளை வழிபட்டார் என்று சரித்திரம் கூறுகிறது. கர்ணன் தானம் கொடுத்தது, “தனக்கு புண்ணியம் மற்றும் அதன் பலன்கள் நிறைய கிடைக்கும்” என்று நினைத்ததால் அல்ல. அதனால்தான் அவனால் தனக்குக் கிடைத்த புண்ணியத்தையே தானமாகக் கொடுக்க முடிந்தது இல்லையா?

கோயிலுக்கு நாம் சென்றால் நமக்குப் புண்ணியம் என்றால், அங்கேயே இருக்கும் அர்ச்சகருக்கு எவ்வளவு புண்ணியம்? ஆனால், அப்படி ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லையே? மதுரை வீரன் போன்றவர்கள் மனிதர்களாகப் பிறந்து, அவர்களுடைய செயல்முறையினால் தெய்வமாக வழிபடத் தக்கவர்களாக ஆகிவிட்டார்கள்
என்று சொல்கிறார்கள். நாம் அவர்கள் நடந்துகொண்டதைப் பின்பற்றாமல், அவர்களுடைய நடைமுறையின்படி வாழ முயற்சிக்காமல், அவர்களை ‘அபிஷேகம்’ மற்றும் ‘ஆரத்தி’ செய்து வழிபட்டால், என்ன அர்த்தம், எந்த

விதத்தில் நியாயம் என்ற கேள்வி எழுப்பினால், நம்மை ‘நாத்திகன்’ என்று முத்திரை குத்தி, ஒதுக்கி வைத்து விடுவார்கள் என்றேத் தோன்றுகிறது. கடவுள் நம்பிக்கை என்பதன் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொண்டு, அதை ஓர் ஊன்றுகோலாக வைத்துக் கொண்டு, அதன் மூலம் நம்மை நாமே உற்று நோக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வது சற்றே கடினமான ஒன்று; எனவே, குழந்தைகள் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடுவது போல, நாமும் சடங்கு மற்றும் சம்பிரதாயங்களில் மட்டும் நம் கவனத்தைச் செலுத்தி, அவற்றில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டு திருப்தி அடைகிறோம். இதனால், கடவுளிடம் நிறையக் கோரிக்கைகள், பிரார்த்தனைகள்; இந்த நமது weak points-ஐ முன்னிலைப்படுத்தி, அதைச் சுற்றி வியாபாரம் - புதிது புதிதாக, நவீன முறைகளில் வேண்டுதல்கள்; ஜோதிடக்காரர்கள்; நாளுக்கு ஒரு குரு; அவர் பின்னால் செல்ல ஒரு கூட்டம்.

எங்கேயோ தொலைத்ததை எங்கோ தேடும் முயற்சி!

ஒரு சுவாரஸ்யமான விஷயம் நினைவுக்கு வந்தது.

சரித்திரத்தில் இடம் பெற்ற இந்த இருவரில் யார் நல்லவர்? முதல்வர், சுத்த சைவம், போதைப் பழக்கம் இல்லாதவர், ஏகபத்தினி விரதன், அலங்கரிக்கப்பட்ட இராணுவ வீரர்; இரண்டாமவர், கடும் அசைவம், குடிகாரர், திருமணம் ஆகியிருந்தபோதிலும் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்ததாகக் கருதப்பட்டவர், பணக்காரத் திமிர் பிடித்தவர்.

நாம் இந்த விளக்கத்தை மட்டும் வைத்துப் பார்த்து ஒருவரை எடை போட்டால், அதை ஆங்கிலத்தில் 'ஸ்டீரியோடைப்' என்று சொல்வார்கள். அது எல்லாத் தருணங்களிலும் சரியாக இருக்காது.

யார் நல்லவர் - பதில்? முதல்வர் - அடால்ப் ஹிட்லர். இரண்டாமவர் - வின்ஸ்டன் சர்ச்சில்.

. இப்பொழுது சொல்லுங்கள், யார் நல்லவர் என்று!

கடவுள் பக்தி என்பது வெவ்வேறு விதமாகப் பல்வேறு மக்களிடம் வெளிப்படுகிறது. கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்வோர் கூட, பக்தியைத் தன்னை அறியாமலேயே வெளிப்படுத்தலாம்.

கணித
மேதை ஸ்ரீனிவாச ராமானுஜனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவருடைய திறமையை உலகிற்கு வெளிக்கொண்டு வந்தவர் ஜி. எச். ஹார்டி என்கிற இங்கிலாந்துகாரர்.

இரண்டு பேருக்கும் சில ஒற்றுமைகள் உண்டு: ஒன்று கணிதத் திறமை; இரண்டாவது ரொம்பக் கூச்ச சுபாவம் உடையவர்கள். இதைத் தாண்டிப் பெரிய வித்தியாசம் ஒன்று உண்டு: ராமானுஜன் பெரிய பக்திமான்; ஹார்டியோ தூய நாத்திகர். ஹார்டி என்கிற நாத்திகர் இல்லையேல், ராமானுஜன் என்கிற பக்திமானுடைய

கணிதத் திறமை உலகிற்குப் பயன்படாமலே போயிருக்கலாம்! “உங்களுடைய கண்டுபிடிப்புகளிலேயே தலை சிறந்தது எது” என்று ஒரு நிருபர் கேட்டபோது, ஹார்டி, சற்றும் தயங்காமல், “ராமானுஜனை கண்டு பிடித்ததுதான்” என்று கூறினாராம்.

என்னைப் பொறுத்தவரையில், அவர்களுடைய கணித ஈடுபாடு, ஒரு வகையிலான கடவுள் வழிபாடுதான் - ஹார்டி அதை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும்!

“கலாச்சாரம் என்பது என்ன? பழங்காலத்தில் கடைப்பிடித்து வந்த பழக்கவழக்கங்களை அப்படியே செய்வதைக் கலாச்சாரம் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். பண்டைய காலப் பழக்கவழக்கங்களைத் தெரிந்துகொண்டு, அதை இந்தக் காலத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதே கலாச்சாரம்” என்று எங்கோ படித்ததாக நினைவு.

புடவை அணிவது, பொட்டு வைத்துக்கொள்வது, கோலம் போடுவது, பண்டிகைகளைக் கொண்டாடுவது இவைகளும் தொன்றுதொட்டு வருபவைதான்; எனவே, இதுவும் கலாச்சாரம்தான். இது மட்டும் கலாச்சாரம் ஆகுமா? இது கலாச்சாரத்தைக் குறிக்கும் சில புறக்குறியீடுகள்; இவற்றின் ஆழ்ந்த அர்த்தத்தை உணராமல் அப்படியே கடைப்பிடிப்பது நம் நோக்கம் அல்ல. நமது கலாச்சாரத்தின் அடிப்படையான குடும்ப உறவுகள், விருந்தோம்பல், எளிமையான வாழ்க்கை முறை, மத நம்பிக்கையை விடவும் உயர்ந்த இலக்கான ஆன்மிகம் போன்றவற்றை நாம் உணர்ந்து பின்பற்றினால், அது நம் அடுத்த தலைமுறைக்கு நாம் செய்யும் மிகப்பெரிய நன்மையாகும்!

**இது முழுக்க முழுக்க நாங்கள் இருவரும் சேர்ந்து விளையாட்டாகச் செய்த ஒன்று; எங்களுடைய rant; இதைச் செய்ததில் எதோ ஒரு சந்தோஷம்; அதை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில்**

**இன்னும் கொஞ்சம் குஷி; உங்கள் பொறுமையை அளவுக்கு மேல் சோதித்திருந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பல்ல ☺**

**நன்றி**

இதைப் படித்து, அவர்களுடைய மேலான கருத்தைச் சொன்னதற்காக பத்மாவின் அம்மா சரோஜா மாமிக்கும், என்னுடைய அக்கா நீலாவுக்கும், பத்மாவின் நண்பி - ஆசிரியை மீனாக்ஷிக்கும், மற்றும் சில நண்பர்களுக்கும் .......

“ஆன்லைன்” புத்தகமாக மாற்ற உதவி செய்த அனந்திற்கும்....

“எடிட்டிங்க்” செய்த அனுவிற்கும் .....

நுணுக்கமாகவும் ஸ்ரத்தையாகவும் “proof-read” செய்த எழுத்தாளராகிய எனது தமக்கை டாக்டர் ரேவதி ராமச்சந்திரனுக்கும்......

ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஒப்புக்கொண்ட என்னுடைய மருமகள் நித்யாவிற்கும் ......

வாசித்தவர்களுக்கும் ....

**கோடானு கோடி நன்றி.**